நங்கையர் மனதைக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு



அம்பிகா ஜுவலர்ஸ்
77 செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி: 422839 434238

செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6553 1990 மார்ச் 31 சனிக்கிழமை ★ ★ ★ தினபதி

தூய்மையான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்

Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO-11.
Phone: 422839 434238



புதிய பிரதமரும் அமைச்சர்களும் பதவி ஏற்றதும் ஜனாதிபதியுடன் (மத்தியில்) எடுத்துக் கொண்ட படம்.

## கல்முனையில்
## 8 கடைகள் எரிக்கப்பட்டன

கொழும்பு, மார்ச் 30

கல்முனையில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான எட்டு கடைகள், ஆயுதம் தாங்கிய குழுவொன்றினால் எரிக்கப்பட்டன.

கடந்த வியாழன் இரவு இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. கல்முனைப் பொலீஸ் நிலையத்தில் இருந்து சுமார் நூறு யார் தொலைவில் இருந்த கடைகளே எரிக்கப்பட்டவையாகும். பொலீஸார் ரோந்தில் இருந்த வேளை இத்தீவைப்பு நடந்துள்ளது.

எரிக்கப்பட்ட கடைகளில் ஒன்று புடைவைக் கடை. இரண்டு கடைகள் இரும்புக்கடைகள். ஏனையவை பலசரக்குக் கடைகள் ஆகும்.

இச்சம்பவம் நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் ஆயுதம் தாங்கிய குழுவின் உறுப்பினர்கள் இக்கடைகளுக்குச் சென்று அங்கிருந்தவர்களை கடைகளை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொண்டனர் என்று கூறப்படுகிறது.

எட்டுக் கடைகள் எரிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து பல கடைகள் நேற்று மூடப்பட்டிருந்தன. அரச அதிகாரிகள் தலையிட்டு கடைகளை திறக்கச் செய்தனர்.

(உ-404)

## நோன்பு தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | — 4-36 |
| ஸுபஹு | — 4-51 |
| சூரிய உதயம் | — 6-11 |
| ளுஹர் | — 12-20 |
| அஸர் | — 3-24 |
| மஃரிபு | — 6-21 |
| இஷா | — 7-41 |

★ 6 புதிய அமைச்சர்கள் ★ காமினி விடுபட்டார் ★ ஹெரோல்ட் ஹேரத் வெளிநாட்டு அமைச்சர்

★ பெஸ்டஸ் பொதுநிர்வாகம் ★ அஸ்வர், ராஜமனோகரி, பாரூக், மஹ்ரூப் ராஜாங்க அமைச்சர்கள்

# விஜேதுங்க மீண்டும் பிரதமர்

# 25 பேர் அமைச்சரவை

## நோன்புக்காக
## மாடு அறுத்த முஸ்லிம்கள்

# பதவி ஏற்றது

## 29 ராஜாங்க அமைச்சர்கள் 23 திட்ட அமைச்சர்கள்

### 80 செயலாளர்களும் நேற்று நியமனம்

கொழும்பு, மார்ச் 30

**திரு. டி. பி. விஜேதுங்க மீண்டும் பிரதமர் ஆனார். 25 பேர் கொண்ட அமைச்சரவை நேற்று பதவி ஏற்றது. 29 ராஜாங்க அமைச்சர்களும் 23 திட்ட அமைச்சர்களும் நியமிக்கப்பட்டார்கள். இவர்களுக்கு ஜனாதிபதி தனது மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.**

அமைச்சுகள், ராஜாங்க அமைச்சுக்ள் திட்ட அமைச்சுகள் ஆகியவற்றின் செயலாளர்களையும் நேற்று ஜனாதிபதி நியமித்தார்- இவர்களின் மொத்த எண்ணிக்கை 80-

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பதவிப் பிரமாண வைபவம் சுமார் இரண்டு மணித்தியாலம் வரை நீடித்தது.

முன்னர் ராஜாங்க அமைச்சர்களாக இருந்த 6 பேர் புதிதாக அமைச்சரவையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் முக்கிய பொறுப்பை ஏற்றுள்ளவர் திரு ஹெரேல்ட் ஹேரத் ஆவார். இவருக்கு வெளிவிகார அமைச்சு வழங்கப்பட்டுளது.

அறுபது வயதான ஜேமஸ் எட்வட் ஹெரோல்ட் ஹேரத் அங்கிலிகன் சமயத்தவர், சட்டத்தரணியும், தோட்டத்துறையாளரும் ஆவார்.

திருவாளர்கள் சந்திரா பண்டார, வீரசிங்க மல்லிமாராச்சி, ரூபசேன கருணாதிலக, ஆர் எம தர்மதாச பண்டார, ஜி எம பிரேமசந்திர ஆகியோரே ஏனைய ஐந்து புதியவர்களும் ஆவர்.

பிரதமராக மீண்டும நியமிக்கப்பட்டுள்ள திரு டி பி விஜேதுங்கவுக்கு நிதியமைச்சு பொறுப்பும வழங்கப்பட்டுள்ளது. புத்தசாசனம, கொள்கை வகுப்பு, பாதுகாப்பு ஆகிய பொறுப்புகளை ஜனாதிபதி தாமே ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதேசமயம் சூழல், வர்த்தகம (கொமர்ஸ்), கைத்தறி, துறைமுகங்கள், தொழில் பயிற்சி, விவசாய ஆராய்ச்சி என்ற புதிய ஆறு அமைச்சுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தலைக்கப்பட்ட அமைச்சரவையில் அமைச்சர்களாக இருந்த திருவாளர்கள் டி பி விஜேதுங்க, விஜேபால மெண்டிஸ், பி தயாரத்ன, ஜோசப் மைக்கல் பெரேரா, அலிக் அலுவிகார, நந்தா மத்தியூ, சிறிசேன குறே, ரணில் விக்ரமசிங்க திருமதி ரேணுகா ஹேரத் ஆகியோருக்கு அவர்கள் முன்னர் வகித்த அமைச்சு பொறுப்புகளே மீண்டும வழங்கப்பட்டுள்ளன.

முன்னைய அமைச்சரவையில் அங்கம வகித்தவர்களில் மீண்

(2ஆம பக்கம பார்க்க)

## அமைச்சரவை அமைச்சர்கள்

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச புத்த சாசனம, கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் மற்றும பாதுகாப்பு அமைச்சுக்களுக்கு பொறுப்பான அமைச்சர்-

(1) திரு டி பி விஜேதுங்க:
பிரதமர் மற்றும நிதி அமைச்சர்.

(2) திரு டி விஜேபால மெண்டிஸ்:
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

(3) ஜனாப் ஏ சி எஸ் ஹமீட்:
நீதி அமைச்சர்.

(4) திரு எம வின்சன்ட் பெரேரா:
சூழல் பாதுகாப்பு, நாடாளுமன்ற விவகார அமைச்சர்.

(5) திரு லலித் அத்துலத் முதலி:
கல்வி, உயர் கல்வி அமைச்சர்.

(2ஆம பக்கம பார்க்க)

## ராஜாங்க அமைச்சர்கள்

(1) திரு ரஞ்சன் விஜேரத்ன:
பாதுகாப்பு

(2) திரு ஹெரால்ட் ஹேரத்:
நீதி

(3) திரு ஜோன் ஏ ஈ அமரதுங்க:
வெளிநாட்டு அலுவல்கள்

(4) திரு (கலாநிதி) விமல் விக்கிரமசிங்க:
கொள்கைத் திட்டமிடல், செயற்படுத்துகை

(5) திரு எச் ஜி பி நெல்சன்:
கிராமியத் தொழிற்றுறை அபிவிருத்தி

(6) திரு எம ஈ எச் மஹ்ரூப்:
துறைமுகங்கள், கப்பற்றுறை

(2ஆம பக்கம பார்க்க)

## திட்ட அமைச்சர்கள்

1 திரு ஏ சி எஸ் ஹமீட்,
உயர்கல்வி அமைச்சர்
(திருமதி) சுனேத்திரா ரணசிங்க,
கல்விச் சேவைகள் அமைச்சர்
திரு சரத்சந்திர ராஜகருணா
சக்தி பேணல் அமைச்சர்
திரு ஈ பி போல் பெரேரா,
விஞ்ஞான, தொழினுட்பவியல் அமைச்சர்
திரு எம எல் எம் அபுசாலி,
பெருந்தோட்டச் சேவைகள் அமைச்சர்
6 திரு எச் பீ வன்னிநாயக்க,
தேசிய மருத்துவ அமைச்சர்
7 திரு இந்திரதாச ஹெட்டிஆராச்சி,
தெங்குக் கைத்தொழில், பயிர் பல்வகைப்படுத்துகை அமைச்சர்

(2ஆம பக்கம பார்க்க)

## மீது தாக்குதல் பற்றி புகார்

கொழும்பு, மார்ச் 30

அனுமதி பெற்ற நோன்புக் கராக மாடு அறுத்துப் பங்கிட்டுக் கொண்டிருந்த முஸ்லிமகள் சிவில் உடையில் வந்த பொலீஸாரினால் தாக்கப்பட்டார்கள் என்ற புத்தளம மாவட்டத்துக்குப் பொறுப்பான பொலீஸ் அதிகாரியிடம புகார் செய்யப்பட்டிருக்கிறது.

வடமேல் மாகாண சபை உறுப்பினர் டாக்டர் இல்யாஸ் புகார் செய்ததோடு மக்களுக்குப் பூரண பாதுகாப்பு வழங்கவேண்டும என்ற கோரிக்கையும விடுத்திருக்கிறார்.

தாக்குதல் சமபவம புத்தளம மாவட்டத்தைச் சேர்ந்த மதவாக்குளம கிராமத்தில் நடந்த

(2ஆம பக்கம பார்க்க)

பாட்டனுடன் படுத்துறங்கிய

## ஆறு வயது சிறுமி கடத்தப்பட்டார்

அக்கரைப்பற்று மார்ச் 30

பாட்டனுடன் படுத்துறங்கிய ஆறு வயது சிறுமி ஒருத்தி படுக்கையில் வைத்து கடத்தப்பட்டார்-

பரபரப்பூட்டும இச்சமபவம அக்கரைப்பற்று பள்ளிக் குடியிருப்பு கிராமத்தில் நேற்று முன்தினம இரவு இடமபெற்றது-

கடத்தப்பட்ட சிறுமியின் பெயர் ஜுனைதா- இவரது தாயார் சவூதியில் பணிப்பெண்ணாக கடமைபுரிகிறார், தந்தை சில்லறை கடை வைத்து வியாபாரம செய்கிறார்-

பள்ளிக்குடியிருப்பில் உள்ள வீட்டில் தனது தாயாரின் தந்தையுடன் (பாட்டனார்) இச் சிறுமி படுக்கைக்குச் சென்றாள்-

பாட்டனார் அயர்ந்து நித்திரையிலிருந்த வேளை வீட்டில் நுழைந்த வாலிபர் ஒருவர் இச்சிறு

(2ஆம பக்கம பார்க்க)

### சோமண்ணை



புதுவருடம தெரிவாகிவிட்டது, விறுவிறுப்பாக மாச் நடக்கட்டும.

## அக்கரைப்பற்றில் புலிகளின் அணிவகுப்பு

அக்கரைப்பற்று மார்ச் 30

ஆயுதப் பயிற்சி பெற்ற தமிழீழ விடுதலை புலிகள் இயக்க உறுப்பினர்கள் 215 பேரின் அணிவகுப்பு மரியாதை வைபவம ஒன்று நேற்று முன்தினம அக்கரைப்பற்றில் நடைபெற்றது-

தாண்டியடி என்ற இடத்தில் ஆரமபமான இந்த அணிவகுப்பு

(2ஆம பக்கம பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# பேருவளையில்

# 2000 வீடுகள் அமைப்பு

கொழும்பு மார்ச் 30

15 லட்சம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தின் கீழ் பேருவளையில் சுமார் 2000 வீடுகள் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன—

பேருவளை நகர எழுச்சி திட்டத்தின் கீழ் 1000 வீடுகளும் பிரதேச கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் 1000 வீடுகளும் நிர்மாணிக்கப்படுகின்றன—

பேருவளை தூலவிலகந்த, பராகொட, கொலனி, பிங்ஹேன அமடேபிட்டிய, தர்காநகர் வெலிப்பிட்டிய, அளுத்கம, வெலந்துடுவ ஆகிய பகுதிகள் பிரதேச கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படுகின்றன

நகர எழுச்சித் திட்டத்தின் கீழ் சீனன்கோட்டை ஸாலிஹ் ஹாஜியார் மாவத்தை, நல்லகேன்னை பாக்கியாவத்த, மருதானை, படகொட, வெள்ளைமணல் போன்ற பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன—

இத்தகவலை வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் மதியாஸ் பாக்கீர் மாக்கார் 'தினபதி'க்குத் தெரிவித்தார்—

(இ-007)

## நாம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க வேண்டும்

### — ரேணுகா

கொழும்பு மார்ச் 30

நாம் ஆஸ்பத்திரிகளுக்கு வரும் நோயாளரின் எண்ணிக்கையைக் குறைத்து ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க வேண்டும் இதுவே எனது பிரார்த்தனையாகும்—

சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் இவ்வாறு கூறினார்.

விசர் நாய்க் கடி ஒழிப்பு பற்றிய கருத்தரங்கில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்

விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தில் இக்கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது. இங்கு அமைச்சர் தொடர்ந்து கூறியதாவது—

விசர் நாய்க் கடி நோயை ஒழிப்பது சிறிய காரியம் இதற்கு முதலில் மக்களின் ஒத்துழைப்பு தேவை

கட்டாக்காலி நாய்களை ஒழிக்க வேண்டும் இந்த நோய் ஒழிப்பு தொடர்பான சட்டப் பிரமாணங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டால் நோயைக் கட்டுப்படுத்தலாம் என்றார்—

சுகாதார ராஜாங்க அமைச்சர் டாக்டர் பீ எஃப் பீ சில்வா பேசுகையில் கொழும்பில் செய்த பணிகளை கிராம மட்டத்தில் செய்ய வேண்டும் இதுவே கோட்பாடாகும்—

விசர் நாய்க் கடி ஒழிப்பு மருந்து கிராமப் புற ஆஸ்பத்திரிகளுக்கும் அனுப்பப்பட வேண்டும் என்றார்

சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் மாலிங்க பெர்னாண்டோ சுகாதாரச் சேவைகள் மா அதிபர் டாக்டர் ஜோ பெர்னான்டோ ஆகியோரும் உரையாற்றினர்

(இ-007)

தினபதி சிறு விளம்பரம்

காணி விற்பனைக்கு

பேராதனை ரயில் ...

## ஈரானிலிருந்தும் நோன்புக்காக பேரீச்சம்பழம்

கொழும்பு, மார்ச் 30

புனித ரமழானை முன்னிட்டு ஈரான இஸ்லாமிய குடியரசு, வழமை போல் இம்முறையும் இலங்கை முஸ்லிம்களுக்காக 80 தொன் பேரீச்சம பழத்தை அன்பளிப்பாக வழங்கி இருக்கிறது.

இந்தப் பேரீச்சம்பழம் கப்பல் ஒன்றில் இன்னும் ஒரு வார காலத்தில் கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் என்று ஈரான் நட்புறவு சங்கத்தின் செயலாளரும், வடமேல் மாகாண சபை உறுப்பினருமான டாக்டர் இல்யாஸ் தெரிவித்தார்

இந்த பேரீச்சம்பழம் சகல பள்ளிவாசல்கள் மூலமும் முஸ்லிம மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் டாக்டர் இல்யாஸ் தெரிவித்தார்.

(உ-வ)

## உடுகம்பொல நாடு திரும்பினார்

## திட்ட அமைச்சர்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

8 திரு ஆரியரத்ன ஜயதிலக
களிப்பொருள், களிப்பொருட் கைத்தொழில் அமைச்சர்.

9 திரு தயானந்த விக்கிரமசிங்க,
மனித வளமூலத் திரட்டல் அமைச்சர்

10 திரு காமினி அத்துகோரளே,
மகாவலி அபிவிருத்தி அமைச்சர்.

11 திரு டிரோன் பெர்ணாந்து,
சட்ட, சிறைச்சாலைச் சீர்திருத்த அமைச்சர்.

12 திரு ஹரேந்திர கொரயா,
தொலைத் தொடர்பு அபிவிருத்தி அமைச்சர்

13 திரு பி பீ கவிரத்ன.
சமூக பண்பாட்டு ஒருங்கிணைப்பு அமைச்சர்.

14 திரு எம ஜீ கங்குந்த,
கைத்தறிச் கைத்தொழில் அமைச்சர்

15 திரு மகேந்திர விஜேரத்ன,
பண்ணை விலங்கு அபிவிருத்தி பாலுற்பத்தி அமைச்சர்.

16 திரு சேனராஜா சமரநாயக்க
ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சர்

17 (திருமதி) அமரா பியசீலி ரத்னாயக்க,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர்

18 திரு ஜே ஜி விஜேரத்ன பண்டா,
கூபத்தொழில் உற்பத்தி, சந்தைப்படுத்தல் அமைச்சர்.

19 திரு ஜோன் ஏ ஈ அமரதுங்க,
மாகாண சபைகள் அமைச்சர்

20 திரு ஆர் பி விஜேசிரி,
மலைநாட்டு சிறு நிலக்கமக்காரர் புனர்வாழ்வளிப்பு அமைச்சு

21 திரு அசோக வடிகமங்காவ,
காணி. காணி பராதீனப்படுத்தல் அமைச்சர்

22 திரு சந்திரா ரணதுங்க,
நிருமாணத்துறை, கட்டிடப் பொருள் அமைச்சர்.

23 திரு கலாநிதி விமல் விக்கிரமசிங்க,
சுற்றாடல் அமைச்சர்

## விஜேதுங்க...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

டும அமைச்சராக சேர்க்கப் ... ருந்தனர். இவர்களில் கூட்டுத் ...



## ராஜாங்க அமைச்சர்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

(7) அல்ஹாஜ் ஜாபீர் ஏ காதர்:
சுகாதாரம

(8) திரு எச் எம ஏ லொக்குபண்டா:
கமத்தொழில் அபிவிருத்தி, ஆராய்ச்சி

(9) திரு ரொகான் அபேகுணசேகர:
வியாபார, வர்த்தகம

(10) திரு மேர்வின் ஜே குரே: வலு, சக்தி

(11) திரு பி எஸ் எல் கலப்பத்தி:
கடற்றொழில், நீரக வள மூலங்கள்

(12) திரு காமினி லொக்குகே:
சுற்றுலாத்துறை

(13) திரு கே அனந்த குலரத்ன:
நெடுஞ்சாலைகள்

(14) திரு எல் பி ஜே செனவிரத்ன:
தொழில், வாழ்க்கைத் தொழில் பயிற்சி

(15) திருமதி எம சமந்தா கருணாரத்ன:
மீளமைப்பு, புனர்வாழ்வளிப்பு, சமூக நலனோமபுகை

(16) திரு லால் தர்மப்பிரிய கமகே:
புத்த சாசனம

(17) ஜனாப் அப்துல் பாக்கீர் மாக்கார்:
வீடமைப்பு

(18) திரு ரவீந்திர சமரவீர:
உணவு, கூட்டுறவு

(19) திரு டி எம அரியதாச:
விளையாட்டுத்துறை

(20) திரு பி பீ தேவராஜ்:
இந்து சமய, பண்பாட்டு அலுவல்கள்

(21) திரு ஏ ஜே ரணசிங்க:
தகவல்

(22) திரு எம எஸ் செல்லச்சாமி:
கைத்தொழில்

(23) ஜனாப் யூ எல் எம பாரூக்:
போக்குவரத்து

(24) திரு சரத் வெலகெதர:
நீர்ப்பாசனம

(25) திரு ஏ சந்திரா கருணாரத்ன:
மகளிர் விவகாரங்கள்

(26) திருமதி ஆர் எம புலேந்திரன்:
கல்வி

(27) திரு திஸ்ஸகுட்டி ஆராச்சி:
நாடாளுமன்ற அலுவல்கள்

(28) அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர்:
முஸ்லிம சமய, பண்பாட்டு அலுவல்கள்

(29) திரு எம டி ஏ குணதிலக்க:
புடைவைக் கைத்தொழில்

## அமைச்சரவை...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

(6) திரு பெஸ்டஸ் பெரேரா:
பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

(7) திரு எஸ் தொண்டமான்:
உல்லாசப் பயணத்துறை, கிராமத் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர்.

(8) ரணில் விக்கிரமசிங்க:
கைத்தொழில், விஞ்ஞான. தொழில்நுட்பத்துறை அமைச்சர்.

(9) திரு பி தயாரத்ன:
காணி, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சர்.

(10) திரு ஜோசப் மைக்கல் பெரேரா:
கடற்றொழில் மற்றும நீர்வளத்துறை அமைச்சர்.

(11) திரு டபிள்யூ ஜே எம லொக்கு பண்டார:
கலாசார அலுவல்கள், தகவல்துறை அமைச்சர்.

(12) திரு அலிக் அலுவிகார:
தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர்:

## அரபுக் கல்லூரி மே 12இல் திறப்பு

கொழுமபு, மார்ச் 30

நோன்பு விடுமுறைக்காக மூடப்பட்டுள்ள கல்முனை அல் ஹாமியா அரபுக் கல்லூரி மே 12ஆம திகதி மீண்டும திறக்கப்படும.

புதிதாகச் சேர விருமபும மாணவர்கள் மே 12 முதல் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

கல்லூரி அதிபருடன் தொடர்பு கொண்டு இதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம. (இ-007)

## குருணாகலையில் கும்பாபிஷேகம்

கொழும்பு மார்ச் 30

குருணாகலை அருள் மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் இன்று 31 ஆம திகதி காலை நடைபெறும்.

காலை 7 மணி சுபநேரத்தில் கும்பாபிஷேக கிரியைகள் ஆரமபமாகும.

கொழும்பு மருதானை ஸ்ரீ கருணா கடாட்ச கைலாச நாதர் ஆலய பிரதம சிவச்சாரியார் சிவ ஸ்ரீ கே பி இராமநாதர் குருக்கள் விழா கிரியைகளை முன்னின்று நடத்தி வைப்பார்.

(இ-ர)

## இன்றைய திரைகளில்

10 வது வாரம
கெப்பிட்டல்
(கொழும்பு)
கடைசி வாரம்
2-30. 6-00. 9-30

லிடோ
(யாழ்நகர்)
10-30. 2-00. 6-00

நியூசிகிரி
(கட்டுகஸ்தொட்டை)
10-30, 2-30, 6-15

பிரபு - அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த

பூ...
பூவா

## காணி விற்பனைக்கு

பேராதனை ரயில் நிலையத்திலிருந்து ஒரு மைலுக்குள் பாடசாலைகள், வைத்தியசாலைகள், பல்கலைக்கழகம் மற்றும் நிர்வனங்களுக்கு சமீபத்தில் போக்குவரத்து, மின்சாரம், நீர் வசதிகளுடனை முஸ்லீமகள் அதிகமாக வசிக்கும பாதுகாப்பான பகுதியில் இன்னும சில காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு- தாமதமின்றி தொடர்பு கொள்ளவும, விபரங்களுக்கு- சட்டத்தரணி அபூசாலி, 6, கொழும்பு வீதி, கண்டி- போன்- 23132

## சஞ்சிகை

"தாயகம" கல்வி இலக்கிய இதழ் வெளிவந்து விட்டது- தபாலில் பெற 10 ரூபா எம எச் எம நவ்பர்- அக்குரணை என்ற பெயருக்கு மணி ஓடர் அனுப்பவும-

editor Thayaham 140, Bulugohatenne Akurana

031711

## லெப்பை தேவை

இரத்மலானை ஜியாரத்தையும அதன் அருகிலுள்ள பள்ளியையும கவனிக்க வேண்டும- வயது 40 க்கு மேலுப. இரத்மலானையிலிருந்து 25 மைல் தூரத்திற்குள் வசிக்க வேண்டும.

Thalayan society 115, messenger S T Colombo 12

033000


## உடுகம்பொல நாடு திரும்பினார்

கொழும்பு, மார்ச் 30

அமெரிக்காவில் கடந்த சில மாதங்களாக இருந்து வந்த பிரதி பொலீஸ் மா அதிபர் பிரேமதாச உடுகமபொல நாடு திருமபினரார்.

லியனாராச்சி கொலை வழக்கின் முக்கிய சாட்சியான இவர் மீது கொழும்பு மேல் நீதிமன்றம பல அழைப்பாணைகளை விடுத்திருந்தது. ஆனால் இவர் நீதிமன்றத்தில் சமுகமளிக்கத் தவறியதையடுத்து கடந்த வாரம திரு உடுகமபொல மீது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

(உ-032)

## நோன்புக்காக...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

தாகக் கூறப்படுகிறது,

சிவில் உடையில் வந்து எச்சரிக்கை செய்து தாக்கியவர்கள் தீவிரவாதிகளாக இருக்கலாம என்று எண்ணி, இறைச்சியைப் பங்கிட்டுக் கொண்டிருந்தவர்கள் திருப்பித் தாக்கினராம.

அதையடுத்து சிவில் உடையில் வந்த பொலீஸார் தமது சகாக்களை அழைத்து வந்து கிராமவாசிகளை மோசமாகத் தாக்கினர் என்று கூறப்படுகிறது.

கிராம மக்கள் பீதியும, பதற்றமும அடைந்துள்ளனர். இவற்றை டாக்டர் இல்யாஸ் பொலீஸ் அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்,

(உ-வ)

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

டும அமைச்சராக சேர்த்துக் கொள்ளப்படாத ஒரே நபர் முன்னாள் தோட்டக் கைத்தொழில் அமைச்சர் திரு காமினி திசாநாயக்கா மட்டுமே.

இவர் நுவரெலிய - மஸ்கெலிய தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தல் ஒன்றின் மூலம நாடாளுமன்றம வந்தவர்.

1977 ஆம ஆண்டு பொதுத் தேர்தலில் மீண்டும தனது தொகுதியைக் கைப்பற்றினார்.

இவர் 1988 ஆம ஆண்டு நாடாளுமன்றம கலைக்கப்படும வரை காணி, காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சராகக் கடமையாற்றி வந்தார்.

நேற்றைய பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்ளும பொருட்டு ஜனாதிபதி மாளிகைக்கு முதனமுதலாக வருகை தந்தவர் முன்னாள் உல்லாசப் பயண அமைச்சர் ஏ எம எஸ் அதிகாரியாவார். பதவிப் பிரமாண வைபவம காலை ஒன்பதரைக்கு ஆரமபமாக இருந்தது. திரு அதிகாரி ஒன்பது மணிக்கே ஜனாதிபதி மாளிகையை வந்தடைந்தார். இவரைத் தொடர்ந்து அழைப்பு விடுக்கப்பட்டிருந்த எல்லா முன்னாள் அமைச்சர்களும, முன்னாள் ராஜாங்க அமைச்சர்களும ஜனாதிபதி மாளிகையை குறித்த நேரத்துக்கு முன்னரே வந்தடைந்தனர்.

அமைச்சர்களாக பதவியேற்று வெளியேறும தமது அபிமான தலைவர்களை வாழ்த்தி வரவேற்கும வகையில் ஜனாதிபதி மாளிகைக்கு வெளியே ஆதரவாளர்கள் மாலைகளுடன் காத்திருந்தனர். இவர்களில் கூட்டுத்தாபன பணிப்பாளர்களும தலைவர்களும அடங்குவர்.

பதவிப் பிரமாண வைபவத்தில் கலந்து கொண்ட அமைச்சர்கள் அநேகமானோர் தமது பாரியார்களுடன் வருகை தந்திருந்தனர். ஜனாதிபதி பதவிப் பிரமாணம செய்து வைத்த போது அவரது செயலாளர் கே எச் ஜே விஜேதாச அருகில் இருந்தார்.

பதவிப் பிரமாணம முடிந்ததும அமைச்சர்கள் ஜனாதிபதியுடன் புகைப்படம எடுத்துக் கொண்டனர். இவ் வைபவம முடிந்ததும ஜனாதிபதி மாளிகையை விட்டு முதலில் வெளியேறியவர் நீதியமைச்சராக பதவியேற்றுள்ள ஜனாப் சாகுல் ஹமீதாவார். இரண்டாவதாக பிரதமர் டி பி விஜேதுங்க வெளியேறினார்.

(உ-032)

## ஆறு வயது...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

மியை கடத்தி மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஏறி தப்பியோடி விட்டார்-

இதுவரை கடத்திச் செல்லப்பட்ட சிறுமி குறித்து எவ்வித தகவலும இல்லை-

இச்சிறுமியை வாலிபர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் கடத்திச் சென்றதை ஊரில் பலரும கண்டனர் என்று கூறப்படுகிறது- பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்-

(உ-வ-035)

கலாசார அலுவல்கள், தகவல்துறை அமைச்சர்.

(12) திரு அலிக் அலுவிகார:
தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர்:

(13) திரு சி நந்கா மத்தியு:
இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர்.

(14) ஜனாப் ஏ ஆர் மன்சூர்:
வர்த்தகத்துறை அமைச்சர்.

(15) திரு யு பி விஜேகோன்:
கைத்தறி மற்றும புடைவைக் கைத்தொழில்துறை அமைச்சர்.

(10) திருமதி ரேணுகா ஹேரத்:
சுகாதார, மகளிர் விவகார அமைச்சர்.

(17) திரு ஏ எம எஸ் அதிகாரி:
மாவாழ்வு மற்றும மறுசீரமைப்பு, சமூக சேமநல அமைச்சர்.

(18) திரு பி சிறிசேன குரே:
வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர்:

(19) திரு ரஞ்சன் விஜேரத்ன:
தோட்ட தொழில்துறை அமைச்சர்.

(20) திரு கே டீ எம சி பண்டார:
எரிசக்தி, மின்சக்தி அமைச்சர்.

(21) திரு ஹெரால்ட் ஹேரத்:
வெளிவிவகார அமைச்சர்.

(22) திரு வீரசிங்க மல்லிமாராச்சி:
உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சர்.

(23) திரு ரூபசேன கருணாதிலக்க:
துறைமுகம மற்றும கப்பற்துறை அமைச்சர்.

(24) திரு ஆர் எம தர்மதாச பண்டா:
விவசாய, அபிவிருத்தி ஆராய்ச்சித்துறை அமைச்சர்.

(25) திரு ஜீ எம பிரேமசந்திர:
தொழில் மற்றும தொழில் பயிற்சி அமைச்சர். (உ-ர)

## அக்கரைப்பற்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

ஊர்வலத்தில் கமாண்டோ சீருடை அணிந்த 175 இளைஞர்களும 40 யுவதிகளும கலந்து கொண்டனர்-

இந்த வைபவத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று வீதிகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன- அக்கரைப்பற்று பிரதான சந்தியில் அலங்கார தோரணங்களும அமைக்கப்பட்டிருந்தன-

அணிவகுப்பு மரியாதைக்கு வசதியாக இந்த வீதிகளில் போக்குவரத்து சேவைகளும நிறுத்தப்பட்டிருந்தன-

அணிவகுப்பு ஊர்வலம அக்கரைப்பற்று பிரதான சந்தியில் முடிவடைந்தது இங்கு அமைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அலுவலகத்தில் வைத்து மேற்படி பயிற்சி பெற்ற வீரர்களும வீராங்கனைகளும அலுவலக பிரமுகர்களினால் வரவேற்கப்பட்டனர்- (உ-வ-035).


பூவா பூத்திருக்கு

(கலர்)

17 வது வாரம

ராஜா (யாழ்நகர்) 10-30. 2-30. 6-00

மிட்லண்ட் (நாவலப்பிட்டிய) 10-30, 2-00. 6-00, 9-00

சாந்தி (மட்டுநகர்) 2-30. 6-30

ரஜனிகாந்த் (இரட்டை வேடம) ராதா - நதியா நடித்த

ராஜாதி ராஜா

(கலர்)

18 வது வாரம

வெலிங்டன் (யாழ்நகர்) 10-30, 2-30, 6-00

கிங்ஸ் (பதுளை) 10-30, 2-30, 6-00

நியூ இம்பீரியல் (இரத்தினபுரி) 10-30, 2-30, 6-00, 9-00

கார்த்திக் — குஷ்பு வி கே ராமசாமி நடித்த

வருஷம் 16

(கலர்)

# 50 படங்களில் வில்லனாக நடித்த விளையாட்டு வீரர்!



மதனகோபால்

தமிழ், தெலுங்கு திரைபபட தயாரிப்பு வட்டாரத்தில் பிரபல மான பெயர்களில் ஒரு 'பெயர் மதனகோபால்-

எப்போதும சிரித்த முகம, செக்கச்சிவந்த நிறம, சிந்தித்து அளந்து உரையாடும திறன் கொண்- இவர் இதவரை தமிழிலும, தெலுங்கிலும வில்லனாக நடித்து திரைக்கு வந்துள்ள படங கள் 50 க்கும அதிகம-

6 அடி உயர ஆஜானுபாகுவான இந்த வில்லன் தமிழ் மண்ணில் பிறந்து வளர்ந்தவர்-

விளையாட்டு வீரரான இவர் தென்னிந்திய ரெயில்வேயில் ஒரு பிரிவில் அதிகாரியாக பணிபுரிகிறார்-

திரைப்பட உலகில் ஏராள மான நண்பர்களை பெற்றுள்ள இவர் "மௌன ராகம" படத்தில் கார்த்திக்கை பிடித்து இழுத்து வரும பொலீஸ் அதிகாரி யாக நடித்தவர்-

வில்லனாகவும வேறு கதா பாத்திரப் படைப்புகளிலும நடிக்கும மதனகோபால் புதுப்படம ஒன்றின் தொடக்க விழாவுக்கு வந்திருந்த போது அவரை நமது நிருபர் சந்தித்தார்-

அப்போது தனக்கே உரிய அடக்க உணர்வுடன் கூறியதாவது-

கோபாலுக்கு சினிமாவில் அதிர்ஷ்டம போதாது- அது மட்டும அடித்திருந்தால் இதற்குள் ரசிகர்கள் உலகம அறிய புகழ் பெற்றிருக்கலாம! என்று திரைப்பட நண்பர்களே கூறுகிறார்கள்-

இந்த அளவுக்கு நல்ல வேலையும பார்த்துக் கொண்டு கலை உலகிலும இருக்கிறானே! இது போதும! அப்படி ஒரு அதிர்ஷ்ட காலம வரும போது வரட்டும-

எனது நண்பரான சினிமா ஆர்ட் டைரக்டர் சூரி டைரக்டர் ராஜ்பாரத்திடம அறிமுகம செய்தது தொடங்கி அவர் டைரக்ட் செய்த "உச்சகட்டம" "சின்ன முள் பெரிய முள்", "தொட்டால் சுடும" ஆகிய படங்களில் நடித்தேன்-

"அழகு" "சுகமான ராகங்கள்" "மௌனராகம" என்று எத்தனையோ படஙகளில் நடித்து விட்டேன்-

சித்ரா ராமு - சித்ரா லட்சுமணன் தயாரிக்கும படஙகளில் எனக்கும ஒரு வாய்ப்பு நிச்சயம வழஙகுவார்கள்-

ஸ்ரீதர் சி வி ராஜேந்திரன், ஆர் சுந்தர்ராஜன், ரகுவரன், நிழல்கள் ரவி, இவர்கள் எல்லாம நீண்ட கால நண்பர்கள்-

முதல் "டி வி" தொடரான "நல்லதோர் வீணை"யில் நடித்தேன்-

எனது இயக்கத்தில் ஒரு படத்தை உருவாக்கவும திட்டமிட்டுள்ளேன், பொலீஸாரின் பிரச்சினைகள் பற்றிய கதை அமைந்த கொண்ட இந்தப் படத்தில் ரகுவரன், நிழல்கள் ரவி நடிக்கிறார்கள்- நான் இயக்குவதுடன் வில்லனாகவும நடிக்கிறேன்-

எனக்கு உறுதுணையாக நிற்கும நண்பர்கள் திரை உலகிலும, ரெயில்வேயிலும ஏராளமான பேர்- அவர்களுக்கும எனக்கு பட வாய்ப்புகள் வழஙகி ஆதரவு தரும அனைவருக்கும கை எடுத்து வணங்கி நன்றியை தெரிவிக்கிறேன்-

இவ்வாறு கூறினார் மதன கோபால்-

(இ-10)




பட்டணத்துப் பொண்ணு, குளிக்கப் போகும லட்சணத்துப் பார்த்து பாண்டியராஜன் ஆச்சரியப்படுகிறாரோ? ஏனென்றில் ரோகிணி இந்த உடையை உடுத்திக் கொண்டு எவ்வாறு உடமபை தேய்த்துக் குளிக்கப் போகிறார் என்றுதான்?
[படம- புது வாரிசு] (இ-10)

## சாந்தி நடிக்கும் "சிரித்தால் இனிக்கும்"

### முழு நீள நகைச்சுவை படம்

ராமரவி மூவீஸ் என்னும நிறுவ...



# கொழும்பிலுள்ள சேரிப்புற வீடுகளுக்கு விரைவில் மின்சாரம்

கொழும்பு மார்ச் 30

கொழும்பு மற்றும அருகில் உள்ள பகுதிகளின் சேரிப்புற வீடுகளுக்கு விரைவில் மின்சாரம வழஙகப்படும-

சேரிப்புற வீடுகளுக்கான மின்சாரம சட்டவிரோதமாக பாவிக்கப்படுகின்றது இதனை தடுக்கும முகமாகவே இலஙகை மின்சார சபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது-

கடந்த காலஙகளில் நாட்டின் மின்சார பாவனைக்கான கேள்விகள் அதிகரித்துள்ளன-

சட்டவிரோத மின்சாரப் பாவனையும கடந்த காலஙகளில் அதிகரித்துள்ளது-

எனவே இதனை தடுப்பதற்காகவே சேரிப்புறஙகளுக்கும மின்சாரத்தை வழஙக இலஙகை மின்சார சபை முடிவு செய்தது என்று இலஙகை மின்சார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்-

(இ-வ)

நகர்ப்புற, தோட்டப்புற மக்கள்

# மலையக பாதுகாப்புக்கு ஒன்றிணைய வேண்டும்

## — அய்யாத்துரை

அட்டன், மார்ச் 29

மலையகத்தில் உறுதியானதொரு பாதுகாப்பு ஏற்பட வேண்டுமானால் தோட்டப்புற மக்களும நகர்ப்புற மக்களும ஒன்றிணைய வேண்டும- கூட்டுறவையும ஐக்கியத்தையும உருவாக்கிக் கொள்ள இவர்கள் முன்வர வேண்டும-

டிக்கோயா, புளியாவத்தை நகரில் தொழிலாளர் தேசிய சஙகத்தின் 22 ஆவது கிளைக் காரியாலயத்தை சஙகத் தலைவர் திரு டி அய்யாத்துரை சமபிரதாயபூர்வமாகத் திறந்து வைத்து பேசும போது இப்படிக் குறிப்பிட்டார்-

சஙக நிர்வாக உறுப்பினர் திரு பி அருணாசலம திறப்பு விழாவுக்கு தலைமை வகித்தார்-

திரு டி அய்யாத்துரை பேசும போது கூறியதாவது—

கடந்த 25 ஆணடுகளாக ஒரு தொழிற் சஙகமாக நாம இயஙகி வந்தோம- இவ்வாண்டு நாம அரசியல் பிரிவாக அஙகீகரிக்கப் பட்டுள்ளோம- எமது நடவடிக்கைகளையும விரிவுபடுத்த வேண்டிய அவசியம ஏற்பட்டுள்ளது-

இது எமது அஙகத்தவர்களுக்கு பெருமைக்குரிய ஒன்றாகும் இது மட்டுமல்ல மே தினத்தோடு எமது சஙகம அதனது 25 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவை வெள்ளி விழாவாகக் கொண்டாடவிருக்கிறது-

மலையகத்தில் காணி பஙகீடு செய்யும போது அதன் முன்னுரிமை எமது மக்களுக்கே இருக்க வேண்டும- வெளியாரைக் குடியமர்த்த நடவடிக்கை மேற்கொண்டால் அதை நாம வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம-

பலமிக்க ஒரு பாட்டாளி வர்க்கம நமமிடையே இருப்பதை மக்கள் மறந்து விடக் கூடாது- எமமிடம இருக்கின்ற மாபெரும சக்திதான் தொழிலாளர் சக்தி-

திரு டி அய்யாத்துரை தனது உரையின் போது இப்படிக் குறிப்பிட்டார்-

இவ் விழாவில் சஙகப் பொதுச் செயலாளரும மத்திய மாகாண சபை உறுப்பினருமான திரு பி வி கந்தையா, நிதித் செயலாளர் திரு பி பெருமாள், உப தலைவர் திரு பி ராமையா, தொழிலுறவுச் செயலாளர் திரு எம எஸ் துரைசாமி ஆகியோரும உரை நிகழ்த்தினர்-

[ஐ—ந—09,6]

# இரு சகோதரர்களை தாக்கி பணம் கொள்ளை

வெலிகாமம், மார்ச் 29

வலஸ்முல்ல பொலீஸ் வட்டாரத்தைச் சேர்ந்த மொரதரவான பிரதேசத்தில் ஒரே குடுமபத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களைத் தாக்கி விட்டு 3752 ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது-

இவ்வாறு இருவர் மீது குற்றம சுமத்தப்பட்டுள்ளது- இவ்வழக்கு மாத்தறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது- இவ் வழக்கில் நீதியரசர் திரு டீ ஜய விக்ரம இரு சந்தேக நபர்களுக்கும சிறைத் தண்டனையும அபராதமும விதித்தார்-

மாத்தறையைச் சேர்ந்த முதலாம எதிரிக்கு 20 வருடம 6 மாதச் சிறைத் தண்டனையும 9 ஆயிரம ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது-

அபராதத் தொகையைச் செலுத்தத் தவறும பட்சத்தில் மேலும 3 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்படும என எச்சரிக்கப்பட்டது-

இரண்டாம எதிரிக்கு 29 வருடம 6 மாதச் சிறைத்தண்டனையும, 15 ஆயிரம ரூபா அபராதமும விதிக்கப்பட்டது-

அபராதத் தொகையைச் செலுத்தத் தவறும பட்சத்தில் மேலும 6 வருடத்திற்கு சிறைத் தண்டனை விதிக்கப்படும என எச்சரிக்கை விடுக்கப்பட்டது-

[இ—331]

## ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்பு

புத்தளம, மார்ச் 29

புத்தளம மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ் மொழி மூலமான பயிலுனர் ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்பொன்று புத்தளம பாத்திமா பெண்கள் மத்திய கல்...

# தமிழ் மொழி அமுலாக்கலை கண்காணிக்க தெரிவுக் குழு

ரவி, இவர்கள் எல்லாம் நீண்ட கால நண்பர்கள்—

பின்னணி பாடகர் எஸ் பி பாலசுப்பிரமணியமும் நானும் சிறு வயது முதலே நண்பர்கள்— நானும் அவரும் சிறு வயதில் நாடகங்களில் நடித்திருக்கிறோம்—

தென்னிந்திய கிரிக்கெட் குழுவில் நானும் ஒரு விளையாட்டு வீரன் என்ற முறையில் இந்தியா முழுவதும் சுற்றி வந்ததுடன் அதனால் மனமும், உடலும் உறுதி பெற்றன—

குத்துச் சண்டை நீண்ட தூரம் நீந்துவது ஆகியவற்றில் பயிற்சி பெற்றிருக்கிறேன்— —

ராமரவி மூவீஸ் என்னும் நிறுவனம் "சிரித்தால் இனிக்கும்" என்ற பெயரில் முழுநீள நகைச் சுவை படம் தயாரிக்கிறது—

ரகுமான்—சாந்திபிரியா ஜோடியுடன் எம் என் நம்பியார், எஸ் எஸ் சந்திரன், ஜனகராஜ், மூர்த்தி சின்னி ஜெயந்த் மனோரமா, குமரி பசு நடிகர் ரவி பிரசாத் நடிக்கிறார்கள்—

கலைஞானம் திரைக்கதை அமைக்க, ஏ வீரப்பன் வசனம் எழுத, ராமரவி மூவீஸ் சார்பாக பொட்டி ஆர் ராமபிரசாத் தயாரிக்கிறார்கள்— கே சங்கர் டைரக்ட் செய்கிறார்—

புராணம், பக்தி, சமூகக் கதை அம்சம் உள்ள 60 படங்களை டைரக்ட் செய்த பழம்பெரும் டைரக்டரான கே சங்கர் கவலை இல்லாத மனிதன் என்ற படத்துக்குப் பின்பு டைரக்ட் செய்யும் நகைச்சுவை காட்சிகள் மிகுந்த படம் "சிரித்தால் இனிக்கும்"

"கலைப் பூங்கா" டி என் ராவணன் தயாரிப்பு நிர்வாகத்தில் தயாராகும் இந்தப் படத்தின் தொடக்க விழா ஏவி எம் படப்பிடிப்பு நிலைய ஒலிப்பதிவு கூடத்தில் பாடல் ஒலிப்பதிவுடன் நடந்தது—

சந்திரபோஸ் இசை அமைக்க, பாடல்கள் எழுதுகிறார் காமகோடியன்—

"சிரித்தால் இனிக்கும் சிரிப்பே ஜெயிக்கும் நல்லதை நடத்தும் வல்லமை கொடுக்கும் நட்பை வளர்க்கும் சிரிப்பு…" எனத் தொடங்கும் பாடல் தொடக்க விழா நாளில் ஒலிப்பதிவானது விரைவில் படப்பிடிப்பு தொடங்குகிறது—

(இ-10)


சாந்தி பிரியா

## பூ வைக்கச் சொல்லி பாடிய

# மாலாவுக்கு முத்தமிட்ட அர்ஜுன்

கட்டுமஸ்தான இளம் காளை சின்னச்சாமி அவனுடைய கனவிலே கட்டுடல் கன்னி ஒருத்தி வந்தாள்— வந்தவளை விலக்க முடியுமா? அணைத்தான், ஆசை தீர முத்தமிட்டான்—

மூணு மொழ நீளத்துல பூவு மச்சான் வந்து வச்சா என்ன கூறு… என்று அவன் பாட அவள் கன்னத்தில் வைத்த உதட்டை எடுக்காமல் வைத்துக் கொண்டே இருந்தான் சின்னசாமி (அர்ஜுன்)—

அர்ஜுன் — புதுமுகம் மாலாஸ்ரீ நடித்த இந்தக் காதல் கனி ரசம் சொட்டும் கனவு காட்சி அனிதா பிக்சர்ஸ் "ஆத்தா நான் பாசாயிட்டேன்" என்ற படத்துக்காக படமானது—

நாசர், கவுண்டமணி, தீபிகா நடிக்க வாலி பாடல்கள் எழுத, வித்யாசாகர் இசை அமைக்கிறார்— திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்து தயாரிக்கிறார், எம் கே சாய்மோகன்—

(இ-10)

வகுப்பொன்று புத்தளம் பாத்திமா பெண்கள் மத்திய கல்லூரியில் நடைபெற்று வருகின்றது—

கடந்த பெப்ரவரி மாதம் முதல் நடைபெற்று வரும் இப் பயிற்சி வகுப்பில் 154 பயிலுனர் ஆசிரியர்கள் கலந்து கொள்கின்றார்கள்—

தொடர்ந்து ஒன்பது வாரங்களுக்கு இந்தப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும்—

(ஐ—241)

## நியமிக்க கோரி விவாதம்

கண்டி, மார்ச் 29

மத்திய மாகாண சபை நிர்வாகத்தில் தமிழ்மொழி அமுலாக்கல் பணிகளை கண்காணிக்க தெரிவுக்குழு ஒன்று நியமிக்கக் கோரும் தீர்மானம் ஒன்று விவாதிக்கப்பட உள்ளது—

இந்தத் தீர்மானத்தை மத்திய மாகாண சபை நுவரெலியா மாவட்ட உறுப்பினரான திரு ஓ ஏ இராமையா (ஐ சோ மு) சபையில் முன்மொழிந்தார்—

இந்தத் தீர்மானத்தை இதே மாவட்ட உறுப்பினரான திரு பி வி கந்தையா வழிமொழிந்தார்—

பிரஸ்தாப தீர்மானம் விவாதத்திற்காக இப்பொழுது முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டு, அடுத்த கூட்ட நிகழ்ச்சி நிரலிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது—

திரு இராமையா சமர்ப்பித்துள்ள தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது—

அரசியல் அமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள தமிழ் மொழி அமுலாக்கம் மத்திய மாகாண சபை நிர்வாகப் பணிகளில் அமுலாக்கப்படவில்லை—

எனவே இதற்கான காரணங்களை ஆராயவும் தமிழ்மொழியை அரச கரும மொழியாக மத்திய மாகாண சபையின் அனைத்து அரச திணைக்களங்களிலும் ஏனைய கூட்டுத்தாபனங்கள் உட்பட அரச நிறுவனங்களிலும் அமுல்படுத்தும் பொருட்டு தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்—

இதன் அடிப்படையில் தெரிவாகும் குழு முதலமைச்சருக்கும் மற்றும் அமைச்சர்களுக்கும் தேவையான பரிந்துரைகளை வழங்க வேண்டும்—

இதன் மூலம் அரச கரும மொழியை அமுலாக்க இந்த மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்—

இப்படி அவரது தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது—

பிரஸ்தாப தீர்மானம் எதிர் வரும் 2 ஆம் திகதி நடைபெற உள்ள மத்திய மாகாண சபைக் கூட்டத்தில் விவாதிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது—

[இ—017]

பதுளை மாவட்ட

# அரச ஊழியருக்கு 6 மாத சம்பளம்

## கடனாக கிடைக்கும்

பதுளை, மார்ச் 29

பதுளை மாவட்டத்தில் உள்ள அரசாங்க ஊழியர்களுக்கு ஆறு மாத சம்பளம் கடனாக உடனடியாக வழங்க ஊவா மாகாண சபை நடவடிக்கை எடுத்து வருகிறது—

சமீபத்தில் ஊவா மாகாண ஆளுநர் காரியாலயத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் இது தெரிவிக்கப்பட்டது—

ஊவா மாகாண சபை அமைச்சு செயலாளர்கள் இக்கடன் சம்பந்தமாக பின்வருமாறு தெரிவித்தனர்—

75 சதவீதமான அரசாங்க ஊழியர்கள் ஆறு மாத கடனுக்கு விண்ணப்பம் செய்துள்ளனர்—

ஆனால் இதற்கு போதுமான பணம் இல்லை எனவும் 9 மாதங்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு மாத்திரமே எம்மிடம் பணம் உள்ளது எனவும் கூறினார்கள்—

ஊவா மாகாண ஆளுநர் திரு திலக் ரத்நாயக்க உடனே தொலைபேசி மூலம் கொழும்புக்கு கதைத்து விண்ணப்பித்தவர்களுக்கு கடன் வழங்குமாறு உத்தரவிட்டார்—

சம்பளம் வழங்க பணம் போதாவிட்டால்தான் திறைசேரி அதிகாரிகளுடன் கதைத்து பணம் பெற்றுத் தருவதாகவும் அவர் செயலாளர்களுக்கு உறுதியளித்தார்—

இதன்படி வெகு விரைவில் அரசாங்க ஊழியர்களுக்கு ஆறு மாத சம்பளம் கடனாக வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது—

[இ—037]

# ஆசிரியர்களுக்கு

## நியமனக் கடிதங்கள்

மாத்தறை மார்ச் 29

இருபத்தையாயிரம் பயிற்சி ஆசிரியர்களை தெரிவு செய்யும் திட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மாத்திரம் தமிழ் மொழி மூல முஸ்லிம் ஆசிரியர்களாக 62 பேருக்கு இதுவரை நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன—

அக்குறலை கல்வி அலுவலக தமிழ் கல்வி அதிகாரி ஜனாப் எம் ஜே முஹம்மது இத்தகவலைத் தெரிவித்தார்—

இவ்வாறு நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பயிற்சித் திட்டத்தை கல்வி அதிகாரி ஜனாப் எம் ஜே முஹம்மது ஆரம்பித்து வைத்தார்—

இந்த ஆசிரிய நியமனத்தின் மூலம் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நிலவிய ஆரம்ப வகுப்பு ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தியாகியுள்ளது—

(ஐ—430)

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613

சுடர் 18 கதிர் 4448
— 1990 மார்ச் 31 —

## உணவுப்பொருள் விலை உயர்வு

தமிழ் – சிங்கள புதுவருடப் பிறப்பு நெருங்குகிறது.

இம்முறை தமிழ் – சிங்களப் புத்தாண்டை ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாச தேசிய புத்தாண்டாகப் பிரகடனம் செய்துள்ளார்.

நாட்டு மக்கள் அனைவரும் தேசிய புத்தாண்டைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று ஜனாதிபதி வேண்டுகோளும் விடுத்திருக்கிறார்.

தேசியப் புத்தாண்டை மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு விரும்பினாலும் உணவுப் பொருள் விலையேற்றம் அதற்கு அனுகூலமாக இருக்குமா என்பது சந்தேகத்துக்கு இடமாக உள்ளது.

இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னர் பாண், கோதுமை மா ஆகியவற்றின் விலைகள் உயர்த்தப்பட்டு விட்டன.

இப்போது மைசூர்ப் பருப்பின் விலையும் அதிகரிக்கப்பட்டு விட்டது.

ஏப்ரல் முதல் வாரத்தில் பாலின் விலையும் உயர்த்தப்படலாம் என்று நம்பப்படுகிறது.

பொருள்களின் விலைகள் இப்படியே உயர்ந்து கொண்டு போனால் வருமானம் குறைந்த சாதாரண பொது மக்கள் என்ன செய்வார்கள்?

மாதச் சம்பளகாரர்களுக்கும் கஷ்டம்தான். பொருள்களின் விலைகள் உயர்கின்றனவே தவிர மாதச் சம்பளம் உயரவில்லை.

விலை உயர்வுகளுக்கு

உலக நாடுகளில் பரவலாக

# நீர் நிலைகள் அசுத்தம் அடைவது அதிகரிப்பு

## பெங்களூர் மாநாட்டில் சுற்றாடல் நிபுணர் அச்சம்

ஆறுகள், கடல்கள், சமுத்திரங்கள் ஆகியவற்றில் தொழில் துறை சம்பந்தப்பட்ட கழிவுப் பொருட்கள், சாக்கடை நீர் ஆகியவை கலப்பது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது–

இவ்வாறு இந்தியாவின் பெங்களூர் நகரில் நடந்த சுற்றாடல் அபிவிருத்தி நிபுணர்கள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது–

இந்தக் கழிவுப் பொருட்கள் பெருமளவில் எண்ணெய், எண்ணெய்ப் பொருட்கள் மற்றும் அசுத்தங்களையும் கொண்டுள்ளன–

பெருமளவில் கடற்கரை நகரங்கள் இவ் வகையான சிக்கலை சமாளிக்கக் கூடிய நிலையில் இல்லை– அதற்கான சுத்திகரிப்பு நிலையங்களும் இல்லை–

இயற்கை நீர் நிலைகள் கடலிலுள்ள உயிர்ப் பொருள்களின் சக்தியையே நம்பியுள்ளன– கடல்கள் இயற்கையாகவே தம்மை தூய்மைப்படுத்தும் சக்தியற்றவையாக இருக்கின்றன–

கடல்கள் அசுத்தமாவது வருங்காலத்தில் மேலும் அதிகரிக்கும்– ஏனெனில் கடலடியிலிருந்து எண்ணெய் தோண்டும் முறை உலகில் பெருகி வருகிறது–

புது விதமான சுத்திகரிப்பு முறைகள் இந்த அசுத்தக் கட்டுப்பாடு பிரச்சினையை தீர்க்கக் கூடிய நிலையில் இல்லை–

அசுத்த திரள்கள் சமுத்திரத்தில் எவ்வாறு ஓரிடம் விட்டு மற்றொரு இடத்திற்குப் பரவுகின்றன என்பது பற்றி நாம் இது வரை நன்கு அறியவில்லை–

இது குறித்து அந்திரேய் கல்மாகாரோவ் என்ற பிரபல சோவியத் விஞ்ஞானியும் கணித நிபுணரும் ஆய்வுகளை நடத்தி உள்ளார்–

இதைப் பற்றி விஞ்ஞான ஆய்வுகளை நடத்த சோவியத் விஞ்ஞானிகள் ஒன்று கூடியுள்ளார்கள்–

இதுகுறித்து அந்திரேய் கல்மாகாரோவ் என்னும் சோவியத் கணித நிபுணர் ஒரு விதியை வகுத்துள்ளார்–

இவ் விதியானது பிரமாண்டமான நீர்ச் சுழிவுகள் சிதைவுற்று சிறிய நீர் சுழில்களாக மாறுவது பற்றிய கணித விளக்க உரையாகும்–

இவரது விளக்கத்தை பேராசிரியர் கல்மாகாரோவ் நிரூபித்துள்ளார்–

இதனை நிரூபிக்க கஸ்பியன் கடலில் ஆய்வுகள் நடந்தன– இந்த ஆய்வுகளை சோவியத் பேராசிரியர் விளாதிமிர் ஸ்டொக்மென் நடத்தியுள்ளார்–

சோவியத் பேரவையின் கடல் ஆய்வுகூடம் ஒன்றுள்ளது– இதன் தலைவர் டாக்டர் போதிஸ்லால்– இவர் உலக சமுத்திரங்களிலும் கருங்கடலிலும் பரவலாக நடத்தியுள்ளார்–

சுழல் ஓட்டங்கள் வெப்பத்தையும் அசுத்தங்களையும் கடத்துவதற்கான சக்தியையும் கொண்டுள்ளன–

சுத்த நீர் நிலை தேக்கங்கள் கடற்கரைப் பகுதிகளின் அருகே உருவாக்கப்படும்–

சுத்திகரிப்பு நிலையங்களில் இவ்விதி பயன்படுத்தப்பட்டுள்ளது–

ரஷ்யாவில் பைகால் ஏரி ரூபின்ஸக் நீர் நிலைத்தேக்கம் ஆகியவற்றை பாதுகாப்பதற்கும் ரசாயன தொழிற்சாலைகள் கட்டுவதற்கும் இந்த ஆராய்ச்சி முடிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன–

[ம—455]

மலையக

## இளைஞர்கள் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணவேண்டும்

### செல்லச்சாமி உரை

அட்டன், மார்ச்– 29

மலையக இளைஞர் யுவதியரின் அபிலாஷைகளை அரசாங்கம் உரிய முறையில் அணுகி ஆராய்ந்து பரிகாரம் காண வேண்டும்–

தவறினால் வடக்கிலும், கிழக்கிலும் தெற்கிலும் ஏற்பட்டது போன்ற இளைஞர்களின் எழுச்சி எதிர்காலத்தில் மலையகத்திலும் ஏற்படும்–

இவ்வாறு கூறினார் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், போக்குவரத்து ராஜாங்க அமைச்சருமான திரு எம் எஸ் செல்லச்சாமி–

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மாநாட்டிற்கு வருகை தந்திருந்த பேராளர்கள் பல காத்திரமான கருத்துக்களை அங்கு தெரிவித்தனர்–

அமைச்சர் செல்லச்சாமி அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது–

சமீப காலங்களில் நாடு ஆயுதம் தரித்த இளைஞர்களின் கிளர்ச்சிகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது–

இன்றைய ஜனாதிபதி இளைஞர்களின் அமைதி இன்மைக்கான காரணங்களைக் கண்டறிய விசேட ஆணைக் குழு ஒன்றை அமைத்தார்–

மலையக இளைஞர் யுவதிகளும் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டுள்ளனர்–

கல்வித்துறையிலும், தொழில் நியமனங்களிலும் இவர்களுக்கு தொடர்ந்து பாரபட்சம் காட்டப்பட்டு வருகின்றது–

இதனால் மலையக இளைஞர், யுவதிகள் பெரிதும் மனம் உடைந்த நிலையில் விரக்திக்குள்ளாகி உள்ளனர்–

இந்த நிலை நீடிப்பது நல்லதல்ல–

இப்படி அமைச்சர் திரு செல்லச்சாமி குறிப்பிட்டார்–

(ஐ—096)

## சுகாதாரம் பற்றி அறிக்கை சமர்ப்பிக்க ஐவர் கொண்ட கமிட்டி

கம்பளை, மார்ச்– 29

நகரின் சுகாதாரம் சீர்திருத்தம் ஆகியனவற்றை கவனித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஐவர் கொண்ட கமிட்டி ஒன்று நியமிக்கப்பட இருக்கிறது

இவ்வாறு நகர சபைத் தலைவர் திரு டி பி குணதிலக்க மாதாந்தக் கூட்டத்தில் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்–

அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது–

எதிர்வரும் 9 மாதங்களும் நகர சபையின் வேலைத் திட்டங்களுக்கு மிகவும் முக்கியமான காலமாகும்– ஆகவே நாம் காலத்தை வீணாக்கலாகாது அதனால் நமது நகரிலுள்ள வேலைத் திட்டங்களை துரிதப்படுத்தி ஆக்கபூர்வமானவற்றை செய்வதற்கு ஐவர் அடங்கிய ஒரு கமிட்டியை நியமித்து செயல்படவுள்ளேன்–

குடிதண்ணீர் பிரச்சினை, வீதிகள் கால்வாய்கள் சுகாதாரம் ஆகியனவற்றை அந்த கமிட்டி கவனித்து அவற்றிற்கான யோசனையை நகர சபைக்கு வழங்கும் இந்த யோசனை நகர சபையால் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களைத் துரிதப்படுத்த பெரிதும் உதவக் கூடியதாக இருக்கும்–

நாம் சுத்தமாக சுகாதாரமாக வாழ விரும்புவதைப் போல நாம் வசிக்கும் நகரத்தை

## மத்துகம பாடசாலையில் தமிழ்ப் பிரிவு மூடப்படுமா?

## செய்தித் திரட்டு

### பாதைகள் சீரற்ற நிலையில்

அக்குறணை மார்ச் 29

அக்குறணை புளுகோஹதென்னைப் பாதையில் வாகனங்கள் செல்வது அபாயகரமாக உள்ளது பல இடங்களில் படுகுழிகள் காணப்படுவதுடன் மழை நீரினால் பாதைகளில் காணப்படும் கற்கள் அடித்து செல்லப்பட்டு மிகவும் பயங்கரமான நிலையில் இப்பாதை காணப்படுகின்றது–

நீர் நிறைந்த குழிகளும், தார்கற்கள் அற்ற வெறும் மண்ணும் வாகனங்கள் செல்வதற்கு குந்தகமாக உள்ளன– இப்பாதை பல்லாண்டு காலமாக புனரமைப்பு செய்யப்படவில்லை– இப்பாதையை சீரமைக்க உடனடியாக ஒழுங்கு நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்க வேண்டும் என பொதுமக்கள் தினபதிக்கு தெரிவித்தனர்–

(ஐ—411)

### கொத்தணி திட்டங்கள்

அக்கரைப்பற்று மார்ச் 29

சாவஷ்தச எழுத்தறிவு ஆண்டை முன்னிட்டு அட்டாளைச்சேனை கொத்தணியில் பல விரிவான திட்டங்களை அட்டாளைச் சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபரும் மேற்படி நிகழ்ச்சியின் தலைமை கல்வி மாவட்ட இணைப்பாளருமான ஜனாப் ஏ ஆர் ஏ அஸீஸ் மேற்கொண்டு வருகின்றார்–

அட்டாளைச்சேனை கொத்தணியிலுள்ள வாசிப்பில் பின்தங்கிய மாணவர்களுக்கு விரைவாக வாசிக்கும் செயற் திட்டம் ஒன்றை தான் மேற்கொண்டுள்ளதாக அதிபர் ஜனாப் அஸீஸ் தினபதிக்குத் தெரிவித்தார்–

இதற்கமையவே 16 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் வார இறுதி நாட்களிலும் – மாலை நேரங்களிலும் இலவசமாக இந்த வகுப்புகளை நடத்த எல்லா ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளதாகவும் ஜனாப் அஸீஸ் மேலும் தெரிவித்தார்–

(ஐ—035)

### பல்கலைக்கழக அனுமதி

கொழும்பு மார்ச் 30

அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக் கல்லூரி முஸ்லி

விலை உயர்வுகளுக்கு ஈடு கொடுக்கக் கூடிய விதத்தில் வருமானம் அதிகரிக்கவில்லை என்றால் அந்தக் கஷ்டத்தை எவ்வளவு காலத்துக்கு மக்கள் பொறுப்பார்கள்?

விலை உயர்வுகள் ஒரு புறம். மறு புறத்தில் வெளிநாடுகளிலிருந்து கப்பல்களில் கொண்டுவரப்பட்ட பருப்பு, சீனி போன்ற உணவுப் பொருள்கள் ஒரு வாரத்துக்கு மேலாகியும் இன்னும் இறக்கப்படவில்லை.

கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே நங்கூரமிடப்பட்டிருக்கின்றன.

காரணம் என்ன?

கப்பல்களைத் துறைமுகத்துக்குள் கொண்டு வந்து பொருள்களை இறக்கினால் அவற்றை எடுத்துச் செல்ல வழியில்லையாம். லொறிகள் வரவில்லை என்று காரணம் காட்டப்படுகிறது.

துறைமுகத்துக்கு வெளியே நிற்கும் கப்பல்களில் உள்ள உணவுப் பொருள்கள் புது வருடப் பிறப்பு விற்பனைக்கு வருமா? எவராலும் சொல்ல முடியாது.

புதிய அமைச்சரவை பதவிக்கு வந்து விட்டது. திரு வீரசிங்க மல்லிமாராச்சி எம் பி உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சராகப் பொறுப்பு ஏற்றிருக்கிறார்.

உணவுப் பொருள்களின் விலை உயர்வுகளைக் கட்டுப்படுத்தவும், உணவுப் பொருள் விநியோகம் நாடு முழுவதிலும் தாமதமின்றிச் சீராக நடைபெறுவதற்கும் புதிய அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

---

மான் திரு எம் எஸ் செல்லச்சாமி—

அட்டன் இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இ தொ காவின் 30ஆவது பேராளர் மாநாட்டுத் தீர்மானங்களை சமர்ப்பித்து அவர் உரையாற்றும் போதே இப்படிக் கூறினார்—

... அமைத்தார்—

அந்த ஆணைக் குழு செய்த சிபார்சுகள் சிலவற்றை ஜனாதிபதி நடைமுறைப்படுத்துவதில் முனைப்பாக செயல்படுகிறார்—

இதனை நாம் மனதார வரவேற்கிறோம்—

---

## எழுத்தாளர், கலைஞர்களுக்கு

# திருகோணமலையில் கலை இலக்கிய வட்டம்

திருகோணமலை மார்ச் 29

திருகோணமலை மாவட்ட எழுத்தாளர்களையும் கவிஞர்கள், கலைஞர்களையும் ஒன்று இணைத்து திருகோணமலை மாவட்ட கலை, இலக்கிய வட்டமொன்று நிறுவப்படவிருக்கின்றது—

திருகோணமலை மாவட்டத்தின் கலை இலக்கிய கலாசாரங்களை திரட்டும் முகமாகவும் அதனை நிறுவன முறையில் பேணி வளர்க்கும் நோக்குடனும் இந்த அமைப்பு நிறுவப்படவிருக்கின்றது—

இவ்வாறு இந்த அமைப்பின் முன்னோடியான கோணைத் தென்றல் ஆசிரியர் தில்லைக்குமரன் தெரிவித்தார்—

வெளியீட்டு வசதியற்று தம் ஆக்கங்களை வைத்திருக்கும் பழம்பெரும் எழுத்தாளர்களின் ஆக்கங்களை வெளியிட ஆவன செய்வது -

இலைமறை காயாக மறைந்திருக்கும் எழுத்தாளர்களை முன்னுக்குக் கொண்டு வருவது திருகோணமலை மாவட்டத்தின் எழுத்தாளர் கலைஞர்களின் பட்டியல்களைத் திரட்டி இதுவரை வெளியிடப்பட்ட ஆக்கங்களை சேமிப்பது போன்ற பலநோக்கு திட்டங்களுடன் இந்த அமைப்பை தாங்கள் நிறுவ இருப்பதாகவும் -

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பழம்பெரும் எழுத்தாளர்களும் - புதிய தலைமுறை எழுத்தாளர்களும் தங்களுடன் கீழ்க் கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளும் படியும் அவர் மேலும் தெரிவித்தார்—

அமைப்பாளர், கலையிலக்கிய வட்டம் - பொது நூலகம், திருகோணமலை— (ஐ—287)

---

# பதுளையில் கடித உறை தயாரிக்கும் தொழிற்சாலை

பதுளை, மார்ச் 30

பதுளை மாவட்டத்தில் கடித உறை (என்வலப்) தயாரிக்கும் தொழிற்சாலையொன்றை அமைக்க ஊவா மாகாண சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஆலி-எல டௌன்ஸ்லண்ட் தோட்டத்தில் இத்திட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக ஊவா மாகாண சபை முதலமைச்சர் திரு பேர்ஸி சமரவீர தினபதிக்குத் தெரிவித்தார்.

பல நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு வழங்கப்படும் எனவும் திரு சமரவீர தெரிவித்தார். (இ—037)

---

# தமிழ்ப் பிரிவு மூடப்படுமா?

காலி மார்ச் 29

களுத்துறை மாவட்டத்தில் உள்ள கன்னங்கரா மத்திய கல்லூரியில் படிப்படியாக தமிழ்ப் பிரிவை மூடிவிடுவதற்குத் திட்டமிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகப் புகார் கூறப்படுகிறது—

தோட்டப்புறங்களில் உள்ள சிறிய பாடசாலைகளில் 5 ஆம் வகுப்பு வரையில் மட்டுமே கல்வி கற்பிக்கப்படுவதால் பெரும்பாலான தோட்டப் பகுதி மாணவர்கள் மேற்படி வித்தியாலயத்தில் சேர்க்கப்பட்டு அங்கு இயங்கும் தமிழ்ப் பிரிவில் சேர்ந்து கல்வி கற்கின்றனர்—

தோட்டப்புறங்களைச் சேர்ந்த தமிழ் மாணவ மாணவிகளின் நலன் கருதி ஏற்கனவே நீண்ட காலத்துக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கல்லூரியின் தமிழ்ப் பிரிவுக்கு மூடுவிழா நடைபெறுமானால் களுத்துறை மாவட்டத்திலுள்ள வறிய தமிழ் மாணவர்களின் கல்வி முன்னேற்றம் பெரிதும் தடைப்பட்டதாகும்—

எனவே மேற்படி "தமிழ்ப் பிரிவு" தங்கு தடையின்றித் தொடர்ந்தும் இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இப்பிரதேசத்திலுள்ள "தமிழ்ப் பேசும் மக்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்— (ஐ—034)

---

நாம் சுத்தமாக சுகாதாரமாக வாழ விரும்புவதைப் போல நாம் வசிக்கும் நகரத்தையும் சுத்தமாக வைத்திருக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்—

நகர சபையால் 242 லட்ச ரூபா செலவில் ஆரம்பிக்கப்படவுள்ள குடிதண்ணீர் திட்டம் விரைவில் ஆரம்பமாகும்—

இதற்கான ஆக்க வேலைகளை தாமதியாமல் செயல்படுத்த நாம் அமைச்சர்களையும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளையும் கேட்டுள்ளோம்—

இவ்வாறு அவர் கூறினார்

நகர சபை உறுப்பினர்களான திரு லட்சுமணப் பெருமாள், திரு ஜினேந்திரதாச டி சில்வா, திரு எஸ் எம் கருணாரத்தின ஆகியோரும் பேசினார்கள்— (ஐ—083)

---

# புனித ரமழான் சிந்தனைகள்

எப். எம். பைரூஸ்

இரு நோன்புகளை நோற்று பக்குவப்பட்டு வரும் நாம் ரமழானின் சிறப்புக்களை அதிகமதிகம் அறிவதும் சிறந்தது—

முன்னைய ஆண்டுகளைப் போலன்றி இம்முறை ரமழான் காலம் மிகவும் வெப்பமாக இருக்கிறது—

கடும் வெய்யிலின் மத்தியிலே வழமையான அன்றாடப் பணிகளையும் மேற்கொண்டவாறுதான் நாம் நோன்பை நோற்றுக் கொண்டிருக்கிறோம்—

பசியையும், தாகத்தையும் பொறுத்திருந்து பக்குவப்படுத்துக் கொண்டு இருக்கிறோம்—

வெப்பமும், உஷ்ணமும் கஷ்டத்தைத் தந்த போதும் நாம் அல்லாஹ்வுக்காக அவற்றைப் பொறுத்துக் கொண்டு நோன்பு நோற்பதால் நமக்கு அளவிலா நன்மைகளே கிடைக்கின்றன—

ரமழான் நோன்பை நோற்கும் அடியானுக்கும் அல்லாஹ்வுக்கும் தான் நோன்பு பற்றித் தெரியும்—

மற்றைய அமல்கள் வெளியில் தெரியக் கூடியவை—

ஆனால் நோன்பை நோற்றுள்ள அடியானுக்கும் அதனை அங்கீகரித்து கூலி வழங்கும் அல்லாஹ்வுக்குமே உண்மை தெரியும்—

ஆகவே தான் நோன்பு எனக்காக நோற்கப்படுகிறது—

அதற்குக் கூலி வழங்கும் பொறுப்பை நானே ஏற்றுள்ளேன் என்று அல்லாஹ் கூறி உள்ளான்—

"மஹ்ஷர்" மைதானத்திலே அணித்திரண்டு இருக்கும் நேரத்தில் உலகில் நோன்பு நோற்ற முஸ்லிம்களுக்கு அல்லாஹ் நீருட்டி அவர்களின் தாகத்தைத் தணிப்பான்—

புனித ரமழான் நோன்பை நாம் சங்கைப்படுத்த வேண்டும்—

ரமழானில் நோன்பு நோற்காத நம்மவர்கள் கண்டபடி எல்லாம் பகிரங்கமாக உணவு அருந்துவதைத் தவிர்க்க வேண்டும்—

எமது செயலையும் நடத்தையையும் கொண்டே நமது செயற்பாடுகள் பிறரால் கணிக்கப்படும் என்பதை மறந்துவிடலாகாது—

எனவே—

நோன்பு நோற்க இயலாதவர்கள் நோன்புக்குக் களங்கம் சேர்க்கக் கூடாது—

அமைதியாக இருந்து கொள்வதே சிறந்தது ஏற்றமானது—

நோன்பின் "பரக்கத்"தைக் கொண்டு அல்லாஹ் எமக்கு அருள் பாலிப்பானாக!

ஆமீன்! யாரப்பல் ஆலமீன்!

---

கொழும்பு மார்ச் 30

அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக் கல்லூரி யில் பயின்று வரும் மாணவர்கள் நால்வர் கடந்த ஜீ சி ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதியை பெற்றுள்ளனர்—

மேற்படி கல்லூரி அதிபர் மௌலவி எஸ் எச் ஆதம்பாவா (மதனி) அமுல் நடத்தி வரும் புதிய கல்வித் திட்டத்தின் கீழ் மௌலவி பட்டம் பெற்று வெளியாகும் சகல மாணவர்களும் இவ்வாறு பல்கலைக்கழக பிரவேசத்துக்கான தகுதியை பெறுவர்—

இக்கல்லூரியில் ஹிப்ளுல் குர்ஆன் கட்டாய பாடமாக போதிக்கப்படுகிறது— இதனால் மேலும் ஐந்து வருடங்களில் இக்கல்லூரியிலிருந்து வெளியேறும் ஒரு மௌலவி அல்குர்ஆனை மனனம் செய்த ஹாபிஸாகவும் வெளியேறுவார் என்று கல்லூரி அதிபர் மௌலவி ஆதம்பாவா (மதனி) நம்பிக்கை தெரிவித்தார்

(—ல)

# செயலகம் இடமாற்றம்

மடவளை மார்ச் 29

பன்விலை பிரதேச செயலகம் புதிய இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது—

பன்விலை மக்கள் வங்கிக் கிளைக்கு அருகில் இயங்கி வந்த பிரதேச செயலகம் தற்போது பன்விலை பஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள அரச கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது—

இதுபற்றிப் போதிய அறிவித்தல் பொதுமக்களுக்கு வழங்கப்படாமை காரணமாக பெருந்தோட்டப் பகுதியைச் சேர்ந்த அனேக தொழிலாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிகிறது— (ஐ—431)

சிம்ரன்ஜித் சிங்மான் தலைமையில்

# பஞ்சாப்பில் தேர்தல் நடத்தக் கோரி ஊர்வலம்

## டில்லி நாடாளுமன்றம் வரை 300க்கும் அதிகமானோர் சென்றனர்

புதுடில்லி, மார்ச் 30

**பஞ்சாப்பில் தேர்தல் நடத்தக் கோரி சீக்கியர்கள் பலர் இந்திய நாடாளுமன்றம் வரை வியாழக்கிழமை ஊர்வலமாகச் சென்றனர். நூற்றுக்கு அதிகமான சீக்கியர்கள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.**

பிரதமர் விஸ்வநாத் பிரதாப் சிங்கின் அரசு மீது எமக்கு நம்பிக்கையில்லையென அகாலி தள் கட்சித் தலைவர் சிம்ரன்ஜித் சிங்மான் தெரிவித்தார்.

சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்த வேளையில் தேர்தலில் போட்டியிட்ட இவருக்கு வெற்றி கிடைத்தது.

பஞ்சாப் இந்தியாவின் நேரடி நிர்வாகத்தின் கீழேயே கடந்த மூன்று ஆண்டுகளாக இயங்குகிறது. இந்த நேரடி நிர்வாகத்தை மேலும் நீடிக்க இந்தியப் பிரதமர் சிங் எண்ணியுள்ளார் இதுபற்றி அவர் அண்மையில் நடத்திய பஞ்சாப் மாநாடொன்றிலும் தெரிவித்தார்.

பஞ்சாப்பில் அன்றாடம் மனிதப் படுகொலைகள் இடம் பெறுகின்றன. இதனால் பஞ்சாப்பில் சுதந்திர தேர்தல்களை நடத்த முடியாதிருப்பதாக பிரதமர் சிங் கூறுகிறார்.

இந்திய அரசாங்கம் எம் மீது நம்பிக்கை இல்லாமலேயே செயல்படுகிறது என்பது பிரதமர் கருத்து மூலம் தெளிவாகிறது என சிம்ரன்ஜித் குற்றம் சாட்டியிருக்கிறார்.

சிம்ரன்ஜித் தலைமையில் சென்ற கோஷ்டி இந்திய நாடாளுமன்றத்தைச் சூழ்ந்து கொண்டது. பெண்கள் உட்பட 300க்கு அதிகமானோர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

1,000க்கு அதிக கலகம் அடக்கும் பொலீஸார் நாடாளுமன்றத்தைச் சுற்றி பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். சிலர் நாடாளுமன்ற வளவுக்குள் புக முயன்றனர். ஆயினும் அவர்களை சிம்ரன்ஜித் தடுத்தார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி படுகொலையில் சம்பந்தப்பட்டு தூக்கிலிடப்பட்ட பிமல் கால்சாலின் மனைவியும் இந்த எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்துகொண்டார்.

(எ)

## தாட்சரின் வெற்றிக்கு முன்னாள் தலைவர் உழைக்க உறுதி

லண்டன், மார்ச் 30

அடுத்த பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் பிரதமர் மார்கிரட் தாட்சரின் வெற்றிக்கு உழைக்கப் போவதாக முன்னாள் கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் நோமன் டெபிட் அறிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் அவர் பதவி விலக நினைத்தால் அதற்கு இடமளிக்கப் போவதில்லையெனவும் அவர் கூறினார்.

1987 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரப் பணிகளின் போது தாட்சரின் வெற்றிக்கு இவர் அயராது உழைத்தார்.

மூன்று முறை அரசியலில் வெற்றியீட்டிய தாட்சர் நான்காவது முறையாகவும் தான் பிரதமர் பதவியை ஏற்க திடசங்கற்பம் பூண்டுள்ளார்.

கடந்த வாரம் நடந்த இடைத் தேர்தலில் அவருக்கு தோல்வியே கிடைத்தது.

புதிய வரிச் சட்டம் ஒன்றினால் தாட்சர் மீதான மக்கள் அபிமானம் குறைந்துவிட்டது.

(எ)

## உலகச் செய்திகள்

## தண்டனையைக் குறைக்குமாறு கோரிக்கை

ஹவானா, மார்ச் 30

மனித உரிமைகள் இயக்கப் பிரதிநிதிகள் இருவர் தமது தண்டனைகளைக் குறைக்குமாறு கேட்டிருக்கின்றனர்.

கியூபாவைப் பற்றி தவறான கருத்துக்களைப் பரப்பியதாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு ருசுப்படுத்தப்பட்டு தலா இரண்டு வருடம் 18 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இத்தண்டனையைக் குறைக்குமாறு உயர் நீதிமன்றத்தின் வாயிலாகக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

(எ)

நேட்டால் மாகாணத்தில்

## கறுப்பர் மோதலுக்கு முடிவு விரைவில் கிடைக்கும்

### மண்டேலா, புதெலெஸ்ஸி சந்திப்பர்

எடன்டேல், மார்ச் 30

தென் ஆபிரிக்காவில் உள்ள நேட்டால் மாகாணத்தில் ஏற்பட்டுவரும் குழப்பங்களைக் கட்டுப்படுத்த தென் ஆபிரிக்காவின் அதி சக்தி வாய்ந்த கறுப்பர் தலைவர்கள் இருவர் முன்வந்துள்ளனர். தலைவர்களான மண்டேலாவும் புதெலெஸ்ஸியும் முன்வந்திருக்கின்றனர்.

ஸுலு இயக்கப் போராட்டங்களால் கடந்த மூன்று ஆண்டுகளாக சுமார் 2,000 பேர் இறந்துள்ளனர். மண்டேலா விடுதலையான பின் உத்தியோகபூர்வ ரீதியில் முதல் தடவையாகவே புதெலெஸ்ஸியை சந்திக்கின்றார்.

நேட்டால் மாகாணத்தில் குழப்பம் நிறைந்த ஒரு நகரில் இரு தலைவர்களும் உரை நிகழ்த்தவிருக்கின்றனர்.

(எ)

## அங்கோலா விமான விபத்து 25 பேர் பலி

லிஸ்பன், மார்ச் 30

அங்கோலாவில் நடந்த விமான விபத்தொன்றில் 25

---


வடக்கு கிழக்கு மாகாண சபையின் கீழ்வரும் இலங்கை நிருவாக சேவையின் 11ஆம் வகுப்பு 11ஆம் தரத்து வெற்றிடங்களை நிரப்புதல்

ஓய்வு பெற்ற நிறைவேற்று உத்தியோகத்தர்களை மறுபடி சேவையில் அமர்த்தல்

என் 245

கீழ்வரும் நிபந்தனைகளுக்கு இணங்க இலங்கை நிருவாகச் சேவையின் 11 ஆம் வகுப்பு 11 ஆம் தரத்து நியமனங்களை பெற்றுக் கொள்ள விரும்பும் அரசாங்க நிறைவேற்று பதவிகளிலிருந்து ஓய்வு பெற்ற தமிழ் மொழி பேசும் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ) அவர்கள் தொடர்ந்தும் வடக்கு கிழக்கு மாகாண சபைகளில் சேவையாற்றுதல் வேண்டும்.

(ஆ) அவர்களின் நியமனங்கள் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும்.

(இ) தற்போது பெறும் ஓய்வூதியத்தை தொடர்ந்தும் பெறுவதுடன் இலங்கை நிருவாகச் சேவையின் 11 ஆம் வகுப்பு 11 ஆம் தரத்துக்குரிய ஆரம்ப சம்பளத்துக்கு மிகையான கொடுப்பனவொன்றை பெறல்

விண்ணப்பங்களை இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்துக்கு இணங்கத் தயார் செய்து தான் இறுதியாக பணிபுரிந்த திணைக்களத்தின்/அமைச்சின் தலைவர் மூலம் செயலாளர், (ஆட்சேர்ப்பு பிரிவு). அரசாங்க நிருவாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு-7 என்ற முகவரிக்கு 1990-04-12 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஒப்பம்
பீ என் எம் பெர்னாந்து
செயலாளர்,
அரசாங்க நிருவாக மாகாண சபைகள்
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு-7.
1990- மார்ச்சு 27 ஆந் திகதி

விண்ணப்பப் படிவம்

வடக்கு கிழக்கு மாகாண சபையின் சேவைக்கு இலங்கை நிருவாகச் சேவையின் 11 ஆம் வகுப்பு 11 ஆம் தரத்தின் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு ஓய்வு பெற்ற நிறைவேற்ற உத்தியோகத்தர்களை மறுபடி சேவையில் அமர்த்துதல்.

1 (அ) முதலெழுத்துக்களுடன் இறுதிப் பெயர்-
(ஆ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்-
(இ) அடையாள அட்டை இல-
2 சொந்த முகவரி-
3 (1) பிறந்த திகதி-
(11) 1990-03-31 க்கு வயது-
4 இறுதியாக பணிபுரிந்த திணைக்களம்/அமைச்சு-
5 இறுதியாக வகித்த பதவி-

தென சிமான்ஜித் குற்றம சாட்டியிருக்கிறார்-

சிறரன்ஜித் தலைமையில் சென்ற கோஷ்டி இந்திய நாடாளுமன்றத்தைச் சூழ்ந்து கொண்டது- பெண்கள் உட்பட 300க்கு மதிகமானோர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்-

1,000க்குமதிக சலம அடக்கும

## ரஷ்ய அமைச்சர்கள் இருவர் பதவி நீக்கம்

மாஸ்கோ, மார்ச் 30

ரஷ்ய சுகாதார அமைச்சரும விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சரும வியாழனன்று பதவி நீக்கம செய்யப்பட்டனர்.

ரஷ்ய தலைவர் மிக்காயல் கோர்பச்சேவின் உத்தரவின் பேரிலேயே இவர்கள் பதவி நீக்கம செய்யப்பட்டனர்.

(எ)

## மண்டேலா, புதெலெஸ்ஸி சந்திப்பா

எடன்டேல், மார்ச்- 30

தென் ஆபிரிக்காவில் உள்ள நேட்டால் மாகாணத்தில் ஏற்பட்டுவரும குழப்பங்களைக் கட்டுப்படுத்த தென் ஆபிரிக்காவின் அதி சக்தி வாய்ந்த கறுப்பர் தலைவர்கள் இருவர் முன்வந்துள்ளனர்- நெல்சன் மண்டேலா மங்கோஸ்கு புதெலெஸ்ஸி ஆகியோரே அந்த தலைவர்கள் இருவருமாவர்

நேட்டால் மாகாணத்தில் மண்டேலாவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸுக்கு (ஏ என் ஸி) ஆதரவான குழுக்களுக்கும், புதெலெஸ்ஸி அதரவு சின் காத்தா இயக்கத்துக்குமிடையே தொடர்ந்து மோதல்கள் இடம பெற்று வருகின்றன-

இந்தக் கோஷ்டி மோதலின் விளைவாக இதுவரை 30 பேர் பலியாகியுள்ளனர்-

மோதல்களைத் தொடரவிடாது தடுப்பதற்காகவே கறுப்பர் இனத்தவரின் இரு பெரும தலைவர்களான மண்டேலாவும புதெலெஸ்ஸியும முன்வந்திருக்கின்றனர்-

ஸுலு இயக்கப் போராட்டங்களால் கடந்த மூன்று ஆண்டுகளாக சுமார் 2,000 பேர் இறந்துள்ளனர்- மண்டேலா விடுதலையான பின் உத்தியோகரீதியில் முதல் தடவையாகவே புதெலெஸ்ஸியை சந்திக்கின்றார்-

நேட்டால் மாகாணத்தில் குழப்பம நிறைந்த ஒரு நகரில் இரு தலைவர்களும உரை நிகழ்த்தவிருக்கின்றனர்-

(எ)

## எயர் பஸ் விமான கொள்வனவில் ஊழல்

### முன்னாள் அமைச்சரும் பங்கு

புதுடில்லி, மார்ச்- 30

இந்தியாவுக்கென பிரான்ஸிலிருந்து கொள்வனவு செய்வதற்காக ஆடர் கொடுக்கப்பட்ட 15 எயர் பஸ்கள் (ஏ 320 ரக) விவகாரத்தில் ஊழல் இடமபெற்றிருப்பதாக அறிவிக்கப்படுகிறது-

முன்னாள் விமானப் போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் ஒருவர் மற்றும 2 முன்னாள் இயக்குனர்கள் உட்பட எட்டுப் பேர் இந்த ஊழலில் சமபந்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது-

இந்த எட்டுப் பேருக்கெதிரான இந்திய மத்திய விசாரணைப் பிரிவினர் (சி பி ஐ) வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்-

இந்த எட்டுப் பேரும எயர் பஸ் விமான கொள்வனவில் லஞ்சம பெற்றிருப்பதாக மேற்படி பிரிவு சாடியிருக்கிறது-

பிரான்ஸ் எயர் பஸ் நிறுவனம பெருந்தொகையான பணத்தை இவர்களுக்கு கமிஷனாகவும லஞ்சமாகவும வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது-

வி-2500 ரக ஜெட் விமான என்ஜின் தயாரிப்பில் பிரசித்தி பெற்ற அமெரிக்க - சுவிட்சர்லாந்து சர்வதேச விமான என்ஜின் உற்பத்திக் கமபனி இந்த விவகாரத்தில் லஞ்சம கொடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது

கடந்த பெப்ரவரி 14 ஆம திகதி எயர் பஸ் விமான மொன்று (ஏ 320) விபத்துக்குள்ளாகியது 92 பேர் உயிரிழந்தனர்-

இதனையடுத்தே விசாரணைகள் நடத்தப்பட்டன-

(எ)

## மாணவர், பொலீஸார் மோதலையடுத்து பாடசாலைகள் மூடப்பட்டன

காத்மண்டு, மார்ச் 30

நேபாளத்தில் மாணவர்களுக்கும, பொலீஸாருக்குமிடையிலான கிளர்ச்சியொன்றினை அடுத்து காத்மண்டு பாடசாலைகள பல மூடப்பட்டன.

மாணவர்கள் இன்று சனிக்கிழமைக்கு முன்னர் விடுதிகளை விட்டு வெளியேற வேண்டுமெனவும பணிக்கப்பட்டுள்ளது,

காத்மண்டு அமிர்த விஞ்ஞான கல்லூரியில் வியாழனன்று நடந்த மோதலில் பத்து பொலீஸாரும, ஆறு மாணவர்களும காயமடைந்தனர். எதிர்க்கட்சியினர் 60 மாணவர்கள் காயமடைந்ததாகத் தெரிவித்துள்ளனர். 6 பேர் படுகாயமடைந்தனர்.

200க்குமதிக மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். பலர் விடுதலை செய்யப்பட்டதாகவும விசாரணைகளின் பின் இன்னும பலர் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும பொலீஸார் தெரிவித்தனர்.

(எ)

## 150 பயணிகள் நீரில் மூழ்கினர்

டாக்கா, மார்ச்- 30

தென் கிழக்கு வங்காள தேசத்தில் நடந்த படகு விபத்தொன்றில் 150 பயணிகள் நீரில் மூழ்கியதாக அறிவிக்கப்படுகிறது-

திடீரெனத் தாக்கிய சுழிக் காற்றில் படகு சிக்கியதால் விபத்துச் சமபவித்தது-

இதுவரை 4? சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன- இன்னும பல நீரில் மிதந்து கொண்டிருக்கின்றன-

6 பேர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்-

(எ—ரி)

## அங்கோலா விமான விபத்து 25 பேர் பலி

லிஸ்பன், மார்ச் 30

அங்கோலாவில் நடந்த விமான விபத்தொன்றில் 25 பேர் உயிரிழந்தனர்.

இந்த விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக யுனிட்டா என்ற விடுதலைப் போராட்ட இயக்கம உரிமை கோரியுள்ளது.

மார்க்ஸிஸ லுஆண்டா அரசுக்கெதிராக கடந்த 15 ஆண்டுகளாக யுனிட்டா இயக்கம போராட்டம நடத்தி வருகிறது

துருப்புகளையும, யுத்த உபகரணங்களையும இந்த விமானம ஏற்றிச் சென்றதாக யுனிட்டா அறிவித்திருக்கிறது.

(எ)

## பிள்ளைபராமரிப்பு நிலையங்களுக்கு இடையிலான போட்டி

### நாளை 1 ஆம் திகதி

தோட்டப் பகுதி பிள்ளை பராமரிப்பு நிலையங்களுக்கு இடையிலான முதலாவது வருட போட்டி நாளை 1ஆம திகதி நடைபெறும-

முதலாம திகதி காலை 9 மணிக்கு லிந்துல மரியா தமிழ் வித்தியாலயத்தில் இப் போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறும-

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை நுவரெலியா வலயத்தின் கீழ் வால்ட்ரிம கொத்தணி (ஜே 27) இதனை ஏற்பாடு செய்துள்ளது-

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் நுவரெலியா வலயத்தின் பணிப்பாளர் நாயகம் திரு எம் சி பி தல்வத்த இந் நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்-

விசேஷ அதிதிகளாக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையில் நுவரெலியா கொத்தணி முகாமையாளர் திரு எஸ் சி இமபுல்தெனிய ம தோ அ சபையின் உடப்புசல்லாவை வலயத்தின் சமூக அபிவிருத்தி பிரிவு முகாமையாளர் திரு டி எம பி ஏ பெரேரா ஆகியோர் கலந்து கொள்வர்-

நுவரெலியா வலயத்தின் கீழுள்ள டிப்படெல்ல தோட்டம, வால்ட்ரிம குரூப், ஹென்போல்ட் குரூப் அக்ரகந்த குரூப் தங்கதெல்ல தோட்டம ஊவா நெல்ல தோட்டம ஆகியவற்றுக்கிடையே நடனம நாடகம பெரஹர போன்றவற்றில் போட்டிகள் நடத்தப்படும-

(ஜ-ஓ)

அமர்த்துதல-

1 (அ) முதலெழுத்துக்களுடன் இறுதிப் பெயர்-
(ஆ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும பெயர்-
(இ) அடையாள அட்டை இல-

2 சொந்த முகவரி-

3 (1) பிறந்த திகதி-
(11) 1990-03-31 க்கு வயது-

4 இறுதியாக பணிபுரிந்த திணைக்களம/அமைச்சு-

5 இறுதியாக வகித்த பதவி-
வகுப்பு- தரம- சேவையின் தன்மை-

6 (1) ஓய்வு பெறும போது பெற்ற சமபள அளவுத் திட்டம-
(11) ஓய்வு பெறும போது பெற்ற சமபளப் படி-

7 ஓய்வு பெறும திகதிக்கு மொத்த சேவைக்காலம வருடத்தில்-
வகித்த பதவிகள் காலத்துடன்-

8 கல்வித் தகைமைகள்- பரீட்சையின் பெயர்-
திகதி-
பாடங்கள்-

9 மொழி அறிவு-

| | வாசித்தல் | எழுதுதல் |
|---|---|---|
| சிங்களம | ............ | ............ |
| தமிழ் | ............ | ............ |
| ஆங்கிலம | ............ | ............ |

10 நீர் ஏதேனும ஒழுக்காற்றுத் தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறெனில் செய்த குற்றம தன்மை, பெற்ற தண்டனையை சுருக்கமாகக் குறிப்பிடுக-

11 உமக்கு எதிராக ஏதேனும ஒழுக்காற்று விசாரணை நடைபெறின் அதன் நிகழ்கால தன்மை-

இலங்கை நிருவாகச் சேவையின் 11 ஆம வகுப்பு 11 ஆம தரத்து பதவியில் நியமனம பெறும பொருட்டு நான் தேர்ந்தெடுக்கப்படின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றுவதற்கான நிபந்தனைகளின் கீழ் அப்பதவியை ஏற்க விருமபுவதாக இத்தால் அறிவிக்கின்றேன்-

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்ட விபரங்கள் முற்றிலும் சரியானவை எனவும உண்மையானவை எனவும அறிவிக்கின்றேன்-

திகதி-

விண்ணப்பதாரரின் கையொப்பம

### நான் இறுதியாக பணிபுரிந்த திணைக்கள தலைவரின் சான்றிதழ்

19......மாதம......ஆந் திகதி எனது முன்னிலையில்..... ...........பதவியை ஏற்ற .........................அல் மேல் கையொப்பம இடப்பட்டுள்ளதென உறுதியளிக்கின்றேன்-

திணைக்களத் தலைவரின் கையொப்பம

பெயர்-

பதவி-

திகதி-

# அடையாள கார்ட் இழந்தவர்: திரும்பப் பெறுவது எப்படி?

கொழும்பு, மார்ச் 30

சதிநாசகார நடவடிக்கைகளினால் தங்களுடைய அடையாள கார்ட்டுகளை இழந்த பொதுமக்களுக்கு அடையாள கார்ட்டின் இணைப் பிரதிகளை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது-

இதனை வெளிவிவகார அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்ன அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்-

இது தொடர்பாக அமைச்சர் மேலும் கூறியதாவது-

1 தொலைந்து போன அடையாள கார்ட்டுகளுக்குப் பதிலாக பிரதி அடையாள கார்ட்டுகள் வழங்கப்படும்-

இதற்கு அடையாள கார்ட்டை பறிகொடுத்தவர், பறிகொடுத்த பிரதேசத்திற்குப் பொறுப்பான கிராமசேவை உத்தியோகத்தரிடமிருந்து தமது அடையாள கார்ட்டைப் பலவந்தமாக எடுத்துச் சென்றனர் என்பதற்குச் சான்றாக ஒரு சான்றிதழைத் தற்பொழுது பெற்றுக் கொள்ள முடியும்-

அந்நபர் கிராம சேவை உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழை அண்மையில் உள்ள பொலீஸ் நிலையப் பொறுப்பு அதிகாரியிடம் காட்டி குறித்த பிரதேசத்தில் சதிநாசகாரர்களால் அடையாள கார்ட் பறித்து எடுக்கப்பட்டது என்பதற்கு புறக்குறிப்பு ஒன்று அந்நிலையப் பொறுப்பு அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்-

அதன் பிறகு அவர் அடையாள கார்ட்டின் இணைப் பிரதியைப் பெற்றுக் கொள்வதற்காக அவர் வதிகின்ற பிரதேசத்தில் கிராம சேவை உத்தியோகத்தருக்கு விண்ணப்பிக்க வேண்டும்-

அதன் பிறகு விண்ணப்பம் அனுப்புகின்ற முறையானது தற்பொழுது நடைமுறையில் உள்ளவாறே அமைந்திருக்கும்-

அவர் ஆபதி வி 7 என்ற இலக்கமிட்ட விண்ணப்பப் படிவமொன்றை கிராமசேவை உத்தியோகத்திரிடமிருந்து பெற வேண்டும்-

அவ்விண்ணப்பத்தை பூரணப்படுத்திப் பொலீஸ் நிலையத்தில் புறக்குறிப்பு கிராமசேவை உத்தியோகத்தர்னால் வழங்கப்பட்ட சான்றிதழ்-

அடையாள கார்ட் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக வழக்கமாகத் தேவைப்படும் புகைப்படங்கள், முத்திரைகள், பிறப்புச் சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் சேர்த்து மீண்டும் அதைக் கிராம சேவை உத்தியோகத்தருக்குக் கையளிக்க வேண்டும்-

விண்ணப்ப படிவத்தின் 2 ஆம் பக்கத்தில் அச்சடிக்கப்பட்டுள்ள விசேட சான்றிதழில் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கையெழுத்தைப் பெற்றுக் கொள்ளத் தேவையில்லை-

இந்த விசேட நடைமுறையானது சதிநாசகாரர்களின் நடவடிக்கைகளினால் அடையாள கார்ட்டுகளை இழந்தவர்களுக்கு மட்டுமே செல்லுபடியாகுமென்றும்,

இந்நடைமுறை 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதி வரை மட்டுமே நடைமுறையில் இருக்கும் என்பதையும் கவனிக்க வேண்டியது-

2 ஆயுதப் படைகளினாலும், பொலீஸாரினாலும் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்ட அடையாள கார்ட்டுகள் உரிமையாளர்களிடம் திருப்பிக் கொடுக்கப்படும்-

பறிகொடுக்கப்பட்ட அடையாள கார்ட் சொந்தக்காரர்கள் எந்தப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் வசிக்கின்றார்களோ அந்தப் பிரிவு உதவி அரசாங்க அதிபரிடம் ஆயுதப் படைகளினாலும், பொலீஸாரினாலும் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்ட அடையாள கார்ட்டுகளை திருப்பிக் கொடுப்பதற்கு பொலீஸ் மாஅதிபர் நடவடிக்கை எடுக்கின்றார்-

பெரும்பாக உதவி அரசாங்க அதிபர்கள் அடையாள கார்டுகளை சொந்தக்காரர்களைத் தேடி அவர்களிடம் அதைக் கையளிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள்-

அடையாள கார்ட்டுகளை எந்தப் பிரதேசத்தில் இழந்தார்களோ, அந்தப் பிரதேசத்தின் பெரும்பாக உதவி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் வேண்டப்படுகிறார்கள்-

இழந்த அடையாள அட்டையின் இலக்கம் இருக்குமானால் அவ் அட்டைகளை இனம் காண்பதற்கு பெரும்பாக உதவி அரசாங்க அதிபருக்கு மிகவும் உதவியாக இருக்கும். இவ்வாறான முறையில் தாம் இழந்த அடையாள கார்ட்டுகள் மீளப் பெற்றுக் கொள்ளக் கூடியவர்கள் பிரதி அடையாள கார்ட்டுக்காக மீள விண்ணப்பம் செய்யத் தேவையில்லை-

3 தற்காலிக அடையாள கார்ட் வழங்குதல்-

தற்காலிக அடையாள கார்ட் ஒன்றைப் பெற விரும்புகின்ற ஒருவர் அவ்வாறான ஆவணம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு பெரும்பாக உதவி அரசாங்க அதிபருக்கு விண்ணப்பிக்க முடியும்-

அதைப் பெற்றுக் கொள்வதற்காக சம்பந்தப்பட்ட நபர் உதவி அரசாங்க அதிபருக்கு விலாசமிடப்பட்ட கடிதம் ஒன்றை எழுதித் தமக்குத் தற்காலிக அடையாள கார்ட் ஒன்றுக்காக விண்ணப்பித்து அக்கடிதத்தை அவருடைய பிரதேச கிராம சேவை உத்தியோகத்தரிடம் கொடுக்க வேண்டும்-

இவ்வாறு கடிதத்தைக் கையளிக்கும் பொழுது அவருடைய கடவுச் சீட்டுக்கு ஆனவான புகைப்படப் பிரதி ஒன்றையும் கையளிக்க வேண்டும்-

தொலைந்து போன அடையாள கார்ட்டின் இலக்கம் இருக்குமானால் அந்த இலக்கத்தையும் கடிதத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்-

கிராமசேவை உத்தியோகத்தர் கடிதத்தையும், புகைப்படத்தையும் பெற்றுக் கொண்டு அந்த நபரின் அடையாள ஆவணம் ஒன்றை உதவி அரசாங்க அதிபரிடம் இருந்து பெற்று மீண்டும் அந்நபரிடம் கையளிக்க வேண்டும்-

4 அடையாள கார்ட் வழங்குவதற்காக கட்டணம் அறவிடுதல்-

அடையாள கார்ட் ஒன்றை வழங்குவதற்காக ஏறக்குறைய 45/- செலவாகிறது- ஆனால் இப்பொழுது திணைக்களம் அடையாள கார்ட் ஒன்றை வழங்குவதற்காக மிகக் குறைந்த பெயரளவுத் தொகை ஒன்றையே அறவிடுகின்றது-

16 வயதை அடைந்த ஒருவருக்கு அடையாள கார்ட் ஒன்றை செய்வதற்காக அறவிடப்படும் 3/- முத்திரைக் காசு ஒரு சிறிய தொகையே

வயதெல்லை அடைந்தும் ஒரு வருடத்திற்கு மேலாக விண்ணப்பிக்கத் தாமதமானவர்களுக்கு குற்றப் பணமாக 10/- அறவிடப்படுகிறது-

பிரதி அடையாள கார்ட் பெறுவதற்கு 15/- மட்டுமே அறவிடப்படுகிறது-

இவ்வாறு அவர் கூறினார்-

(இ—கு)

---

## மக்களும் பதவியும்

### [illegible] சபைத் தலைவர்



கிண்ணியா மார்ச் 29

கிண்ணியா உதவி அரசாங்க அதிபர் பிரிவை [illegible] சாக்கணி மேற்கு காக்கா முனை) சர்வோதய சபையின் தலைவராக ஜனாப் அப்துல் கரீம் கனியூன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்-

ஜனாப் கனியூன் பாயிஷா சர்வோதய சிரமதான சங்கம் அல் அமீன் சனசமூக நிலையம் ஆகியவற்றின் தலைவராகவும் —

கிண்ணியா ப நோ கூ சங்கத்தின் 15ஆம் கிளைக் குழுவின் செயலாளராகவும் இர்ஷாத் இளைஞர் விவசாயக் கழகத்தின் உபதலைவராகவும் இவர் கருமமாற்றுகிறார்-

[ஐ—151]

### நம்பிக்கையாளர் சபை நிர்வாகிகள்

கிண்ணியா மார்ச் 29

கிண்ணியா உதவி அரசாங்க அதிபர் பிரிவின "மஹ்ரூப் நகர்" "அண்ணல் நகர்" இரு கிராமச் சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய "அல் மஸ்ஜிதுல் ஜலாலிய்யா ஜும்ஆப் பள்ளிவாசல்" நம்பிக்கையாளர் சபைத் தெரிவு பள்ளிவாசல்களின் சம்மேளனத் தலைவர் ஜனாப் ரீ ஏ எம இஸ்ஹாக் தலைமையில் நடைபெற்றது-

பின்வருவோர் நம்பிக்கையாளர் சபை நிர்வாகிகளாகத் தெரிவாகினர்-

தலைவர்— ஜனாப் ஓ எம அப்துல் சமது (ஸ்ரீலங்கா துறைமுக அதிகார சபை)

உபதலைவர்— ஜனாப் எம எஸ் உமறுலெப்பை -

செயலாளர்— ஜனாப் ஏ எம உமறுலெப்பை [கிராம சேவகர்]

உப செயலாளர்— ஜனாப் எம முகம்மதலி -

பொருளாளர்— ஜனாப் எம எல் முகம்மது ஹனிபா

நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் விபரம்— ஜனாப்கள் எம ஐ மெய்யதீன், கே எம நசூர், பீ ஏ றவூப், ஏ ஹக்கிம எஸ் எம நஸ்ரீப், சி எம ஏ ஹாதர்.

போஷகர்கள்— ஜனாப்கள் வீ எம எச் செய்யது முகம்மது -

---

# பலத்த வெடியோசை கேட்டதையடுத்து நான் உணர்வை இழந்தேன்

## பஹுதாரர் நீதாயத்தில் சாட்சியம்

கொழும்பு, மார்ச் 30

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அநுராதபுரம் அரசாங்க அதிபர் என்னை உதவி தேர்தல் அதிகாரியாக நியமித்திருந்தார்- இதை அடுத்து ஹொரவப்பொத்தானை தொகுதியைச் சேர்ந்த பறங்கியாவாடிய வாக்குச் சாவடியை நோக்கி நான் வாக்குப் பெட்டிகளுடன் பிரயாணம் செய்தேன்- நான் பிரயாணம் செய்த வாகனம் காலை எட்டு மணியளவில் அநுராதபுரத்தை விட்டுப் புறப்பட்டது- வழியில் பலத்த வெடியோசை கேட்கவே நான் உணர் வைஇழந்தேன்- காரணவில்லை- ஆனால் கேள்விப்பட்டேன்-

சட்டத்தரணி— மாவத்தவெவயல விவசாய அதிகாரி ஜெனவரத்ன 1988 ஆம் ஆண்டு நவம்பர் இரண்டாம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்?

சாட்சி— அதுபற்றி எனக்குத் தெரியாது-

சட்டத்தரணி— கோன்வெவ உப தபாலதிபர் நவம்பர் 14 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்?

சாட்சி— சம்பவம் நடைபெற்ற சில தினங்களில் பின்னர் நான் இதைக் கேள்வியுற்றேன்-

சட்டத்தரணி— அவர் ஐக்கிய [illegible]ளவுதான் எனக்குத் தெரியும்- அநுராதபுர ஆஸ்பத்திரியில் [illegible] எனக்கு நினைவு திரும்பியது- தலையான இடதுபுறம் காயமடைந்திருந்தது-

சட்டத்தரணி— எப்பக்கமாக வெடிச் சத்தம் கேட்டது?

சாட்சி— இடப்பக்கம் இருந்து- அநுராதபுரத்தில் இருந்து 16 மைல் தொலைவில் [illegible] விலை என்ற இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றது- நான் 45 நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெற்றேன்-

சாட்சியை பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணி கே என் சொக்ஸி குறுக்கு விசாரணை செய்தார்-

இதன் பின்னர் எஸ் எம எம ஆர் குணபால சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார்-

சாட்சியை சட்டத்தரணி எம டபிள்யூ அமரசிங்க விசாரித் [illegible] வந்ததினாலா?

சாட்சி— ஆம்!

அடுத்து எம ஏ விக்கிரமசேகர சாட்சியமளித்தார்-

சாட்சியை சட்டத்தரணி எம டபிள்யூ அமரசிங்க விசாரணை செய்தார்-

சட்டத்தரணி— நீர் சுதந்திரக் கட்சி உறுப்பினரா?

சாட்சி— கடந்த 28 ஆண்டுகளாகவே கட்சி உறுப்பினராக இருந்து வருகின்றேன்- ஜனாதிபதி தேர்தலின் போது குருளுவெவ பகுதிக்கான இணைப்புச் செயலாளராகக் கடமையாற்றினேன்-

சட்டத்தரணி— குருளுவெவ பகுதியில் பிரசாரம் செய்யும் போது நீர் பொது இடங்களில் எதையாவது கண்டீரா?

சாட்சி— ஆம- பச்சை நீலம் மற்றும் சிவப்பு வர்ணங்களில் சுவரொட்டிகளைக் கண்டேன்,

சட்டத்தரணி— மின்னேரிய மற்றும் திருகோணமலை எல்லைப் [illegible] லப்பட்டனர்- தேர்தலுக்கு முன் தினம் இச்சம்பவத்தை நான் பத்திரிகையில் வாசித்தேன்-

சட்டத்தரணி— இவ்வாறான செய்திகள் பரவிய போது மக்கள் அதுபற்றி என்ன நினைத்தனர்-

சாட்சி— எமது ஆதரவாளர்கள் அச்சமடைந்திருந்தனர்- அரசியல் பணிகளில் ஈடுபடத் தயக்கம் காட்டினர்-

சட்டத்தரணி— இவ்வாறான காரணங்களினால் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகளை உம்மால் செம்மையாக முன்னின்று நடத்த முடிந்ததா?

சாட்சி— இல்லை- திட்டமிட்ட பிரகாரம் என்னால் பணிகளை செய்து முடிக்க இயலவில்லை-

சட்டத்தரணி— நீர் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தீரா?

சாட்சி— இல்லை- களனி தொகுதியில் நான் பதிவு செய்யப்பட்ட வாக்காளராக இருந்த போதிலும் நான் வாக்களிக்கவில்லை-

சாட்சியை சட்டத்தரணி சொக்ஸி குறுக்கு விசாரணை செய்தார்-

[illegible]தும நான் அதைக் கண்டித்தேன். தும நான் அதைக் கண்டித்தேன் ஆனால் இச்சம்பவம் எப்போது நடைபெற்றது என்பது ஞாபகத்தில் இல்லை-

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் ஒருவரின் மரணச் சடங்குகளில் நான் கலந்து கொண்ட போது அங்கு வந்த மாகாண முதலமைச்சர் நான் கைது செய்யப்பட வழிவகுத்தார்- நான் 18 நாள் சிறையில் வைக்கப்பட்டேன்- இதனால் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கு நேர்ந்தவை பற்றி கவலை கொள்ளவில்லை- ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே நான் [illegible] சடங்கில் கலந்து [illegible]

பிரதம நீதியரசர்— நீர் பொலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதும் [illegible] முதலமைச்சர் உம்மை விசாரித்தார்?

சாட்சி— ஆம-

சொக்ஸி— பூஸாவில் நீர் எவ்வளவு காலம் வைக்கப்பட்டிருந்தீர்?

சாட்சி— ஒரு வருடத்துக்கு 18 நாட்கள் குறைவான காலம.

# ஜனாதிபதி தேர்தல் வழக்கு

யில் புலத்த வெடியோசை கேட்கவே நான் உணர் விழந்தேன்—

மூன்று நாட்களின் பின்னரே நான் கண்விழித்தேன்— என்னை அனுராதபுர ஆஸ்பத்தியில் சேர்த்திருந்தார்கள்— துப்பாக்கிச் சூட்டுக் காயம ஒன்று என் தலையில் காணப்பட்டது—

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மனு மீதான விசாரணையில் மனுதாரர் தரப்பில் சாட்சியமளித்த எச் எச் பியதாச இவ்வாறு கூறினார்—

திரு ஆர் பிரேமதாச ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியது செல்லுபடியாகாது என தெரிவித்து திருமதி பண்டாரநாயக்கா உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்க நீதியரசர்கள் எச் டி தமபையா ஜி பி எஸ் டி சில்வா எம ஜமீல் பி இராமநாதன் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது—

முதலில் ஹொரவப்பொத்தானையைச் சேர்ந்த பி பி திசாநாயக்க சாட்சியமளித்தார்—

சாட்சியை சட்டத்தரணி எல் சி செனவிரத்ன குறுக்கு விசாரணை செய்தார்—

சட்டத்தரணி— மொறவக்கையில் அமைந்துள்ள திரு ஈ எல் பி ஹுருள்ளையின் வீடு டிசமபர் 19ஆம் திகதி தீயிட்டு எரிக்கப்பட்டதா?

சாட்சி— ஆம. பாதையால் செல்லும்போது அதை நான் கண்டேன்—

சட்டத்தரணி— டிசமபர் 18ஆம திகதி தெமட்டவெவை அரசாங்கப் பாடசாலையும கொளுத்தப்பட்டதா?

சாட்சி— நான் இதைக் ...மறேன்—

சட்டத்தரணி— அவர் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளரா?

சாட்சி— முன்னர் ஆதரவாளராக இருந்தார்— பின்னர் இவர் அரசியலை விட்டு ஒதுங்கினார்,

சாட்சியை சட்டத்தரணி எம டபிள்யூ அமரசிங்க மீள விசாரணை செய்தார்— திரு ஹுருள்ளையின் வீட்டை யார் எரித்தது என்ற கேள்விக்கு சாட்சி தனக்குத் தெரியாது என்று பதிலளித்தார்—

இதன் பின்னர் எச் எச் பியதாச சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார்—

சட்டத்தரணி எம டபிள்யூ அமரசிங்க சாட்சியத்தை நெறிப்படுத்தினார்—

சட்டத்தரணி— தேர்தல் தினத்தன்று காலை நீர் எங்கிருந்தீர்?

சாட்சி— அனுராதபுரம அம்பபுர வீட்டில் இருந்தேன். அன்று காலை வீடுவந்த இரு இராணுவ வீரர்கள் அனுராதபுரம அரச அதிபர் அழைப்பதாக என்னிடம தகவல் தெரிவித்தனர். தேநீர் அருந்தியதும ஜீப்பில் அவர்களுடன் அனுராதபுரம கச்சேரியை அடைந்தேன்— அங்கு அரச அதிபரைச் சந்தித்தபோது தேர்தல் அதிகாரியாக நியமனம பெற்றிருப்பதை அறிந்து கொண்டேன்— நியமனக் கடிதமும எனக்கு வழங்கப்பட்டது— இதைத் தொடர்ந்து வாக்குப் பெட்டிகளை வாகனம ஒன்றில் ஏற்றியபடி பறங்கியாவாடிய தேர்தல் சாவடியை நோக்கி சென்றேன்— கூடவே பொலீஸாரும என்னுடன் வந்தனர்—

சட்டத்தரணி— வழியில் என்ன நடந்தது?

சாட்சி— வழியில் பலத்த ஓசை ஒன்று கேட்டது— அவ்வ... அழைக்கப்பட்டார்—

சாட்சியை சட்டத்தரணி எம டபிள்யூ அமரசிங்க விசாரித்தார்—

சட்டத்தரணி— தேர்தல் எதிர்ப்புச் சுவரொட்டிகளில் எவ்வாறான வாசகங்கள் காணப்பட்டன?

[illegible]

மோசடித் தேர்தலை பகிஷ்கரிக்கவும வாக்காளர்களுக்கும முதல ஐந்து வாக்காளர்களுக்கு மரணம் என்பதாக இச் சுவரொட்டிகளில் எழுதப்பட்டிருந்தன— வேறு சில சுவரொட்டிகளில் 72 மணித்தியால ஊரடங்கு பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது—

சட்டத்தரணி— பொலீஸாரோ அன்றி இராணுவத்தினரோ இச் சுவரொட்டிகளை அகற்றினரா?

சாட்சி— இல்லை— போக்குவரத்துச் சபை பஸ்களிலும இச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன—

சாட்சியை சட்டத்தரணி கே என் சொக்ஸி குறுக்கு விசாரணை செய்தார்—

சட்டத்தரணி— ஜே வி பியினரின் நடவடிக்கைகள் உமது மாவட்டத்தில் காணப்பட்டதாக நீர் கூறுகிறீரா?

சாட்சி— ஆம!

சட்டத்தரணி— அவர்கள் பயமுறுத்தல் சுவரொட்டிகளை ஒட்டினரா?

சாட்சி— ஆம்!

சட்டத்தரணி— பிரேமதாசவின் மோசடித் தேர்தல் என சில சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டிருந்தது?

சாட்சி— ஆம!

சட்டத்தரணி— ஜே வி பி திரு பிரேமதாசவை எதிர்த்து

சட்டத்தரணி— மின்னேரிய மற்றும திருகோணமலை எல்லைப் புறங்களிலும இவற்றை நீர் கண்டீரா?

சாட்சி— ஆம—

சட்டத்தரணி— இவை எவ்வாறான உணர்வுகளை மக்களிடையே தோற்றுவித்திருந்தன?

சாட்சி— வாக்களிப்பவர்களுக்கு மரணம மோசடி தேர்தலில் பங்கேற்க வேண்டாம— வீட்டை விட்டு வெளியேறவேண்டாம என்ற வாசகங்களைக் கொண்ட சுவரொட்டிகளைக் கண்டு மக்கள் அச்சமுற்றனர்—

சட்டத்தரணி— இந்த அச்சுறுத்தல்கள் மூக்கிரியாவ பகுதியில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தனவா?

சாட்சி— ஆம! மூக்கிரியாவையில் வாக்களிக்கச் சென்ற எமது இரு கட்சி ஆதரவாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்— பறங்கியாவாடியவிலும இதே மாதிரியான சமபவம் ஒன்று நடைபெற்றது— நான் இதுபற்றிக் கேள்விப்பட்டிருந்தேன்—

இப்படிச் சொன்ன சாட்சி அச்சமபவம தமக்கு நினைவுக்கு வந்துள்ளதென்றும நீதிமன்றத்திற்கு அதைத் தெரிவிக்கத் தயார் என்றும சொன்னார்—

நீதியரசர் தமபையா— பறங்கியாவாடியில் என்ன நடந்தது?

சாட்சி— வாக்குப் பெட்டிகளை எடுத்து வந்த தேர்தல் அதிகாரி சுடப்பட்டார்—

சட்டத்தரணி— கலாவெவையில் ஏதாவது நடந்ததா?

சாட்சி— எமது ஆதரவாளர்கள் ஐந்து பேர் சுட்டுக் கொல்

சாட்சியை சட்டத்தரணி சொக்ஸி குறுக்கு விசாரணை செய்தார்—

சட்டத்தரணி— நீர் களனியில் வசிப்பவரா?

சாட்சி— 1987ஆம ஆண்டுக்கு முன்னர் நான் களனியில் நிரந்தரமாகக் குடியிருந்து வந்தேன்— தேர்தல் சமயத்தில் கலென்பிந்துனுவெவையில் குடியிருந்தேன்—

சட்டத்தரணி— பறங்கியாவாடிய சாவடியைச் சேர்ந்த தேர்தல் அதிகாரி சுடப்பட்டதாக நீர் கூறினீரா?

சாட்சி— ஆம—

சட்டத்தரணி— துப்பாக்கிச் சூடு, கொலை போன்ற சமபவங்கள் எல்லாக் கட்சி ஆதரவாளர்களையும எட்டியிருக்கும?

சாட்சி— விவரமாக எனக்கு இதுபற்றித் தெரியாது— ஆனால் கட்சி ஆதரவாளர்கள் இவை பற்றி என்னிடம கேட்டனர்—

சட்டத்தரணி— சூட்டுச் சமபவம நடைபெற்ற பின்னர் பறங்கியாவாடிய சாவடியில் வாக்களிப்பு நடைபெறவில்லை?

சாட்சி— இல்லை—

சட்டத்தரணி— உமக்கு இது பற்றி ஒன்றும தெரியவில்லை— இச்சாவடியில் வாக்களிப்பு நடைபெற்றது—

சாட்சி— இல்லை—

சட்டத்தரணி— நீர் இச்செய்தியைக் கேள்விப்பட்டீரா? அல்லது நீரே போய்ப் பார்த்தீரா?

சாட்சி— காலை பத்தரை அல்லது பதினொரு மணியளவில் நான் சமபவத்தை கேள்விப்பட்டேன்—

சட்டத்தரணி— சுதந்திரக் கட்சியைப் பாதிக்கவில்லை என்பதால் தானே நீர் திரு ஹுருள்ளையின் வீடு எரிக்கப்பட்ட சமபவத்தை மறந்துவிட்டீர்?

சாட்சி— இல்லை— இச்

சாட்சி— ஒரு வருடத்துக்கு 18 நாட்கள் குறைவான காலம.

சட்டத்தரணி— நீர் தீவிரவாதி என கருதப்பட்டதால உமமீது தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது?

சாட்சி— ஆம—

சட்டத்தரணி— நீர் எப்போது விடுதலை செய்யப்பட்டீர்?

சாட்சி— 1989 டிசமபரில்!

நீதியரசர் தமபையா— எப்போது நீர் கைது செய்யப்பட்டீர்?

சாட்சி— 1989 ஜனவரியில் அப்போது பொதுத் தேர்தல் பிரசார பணிகளில் நான் ஈடுபட்டிருந்தேன்—

சட்டத்தரணி— கலென்பிந்துனுவெவை பொலீஸாரா உமமைக் கைது செய்தனர்?

சாட்சி— அழைப்பின் பேரிலேயே அங்கு சென்றிருந்தேன்— உயர் அதிகாரிகளின் கட்டளை பிரகாரமே தான் செயற்படுவதாகக் கூறிய பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரி என்னைத் தடுத்து வைத்தார்— அங்கு நான் 15 நாட்களாக வைக்கப்பட்டேன்— பின்னர் பூஸாவுக்கு அனுப்பப்பட்டேன்—

சட்டத்தரணி— எம டபிள்யூ அமரசிங்க சாட்சியை மீள் விசாரணை செய்தார்—

சட்டத்தரணி— உம மீது குற்றச்சாட்டுகள் ஏதும சுமத்தப்பட்டனவா?

சாட்சி— இல்லை— வழக்கு கொடுக்கப்படவுமில்லை— ஜயலத் கமிட்டியின் கீழ் நான் விடுதலையானேன்—

சட்டத்தரணி— தீவிரவாதி என உம மீது குற்றமசுமத்தப்பட்டதா?

சாட்சி— என்னைக் கைது செய்தவர்கள் நான் ஒரு கொலையாளி என்று கூறினர்—

சட்டத்தரணி— நீர் எப்போதாவது தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தீரா?

சாட்சி— இல்லை—

சட்டத்தரணி— நீர் எப்போதாவது கொலை செய்திருக்கிறீரா?

சாட்சி— இல்லை— நான் 18 ஆண்டுகளாக தர்ம பாடசாலை ஆசிரியராக இருந்திருக்கிறேன்— உல்லாச பயண சபையிலும கடமையாற்றியுள்ளேன்— 1977ஆம ஆண்டு தொழில் இழந்தேன்—

[விசாரணை தொடரும]

[ந—032]

போஷகர்கள்— ஜனாப்கள் வீ எம எச் செய்யது முகம்மது — என் எம செய்லாப்தீன் [இலங்கை புகையிரதப் பகுதி]

கணக்குப் பரிசோதகர்— ஜனாப் ஏ ஆர் எம றபீக்—

[ஐ—151]

## பணிப்பாளராக பதவி உயர்வு

கண்டி மார்ச 29

கண்டி மாவட்ட கல்வித் திணைக்களத்தில் பிரதம கல்வி அதிகாரியாகப் பணிபுரியும ஜனாப் எம எம ஏ குத்தூஸ் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்—

ஆசிரியராக சேவையில் புகுந்த இவர் யாழ் ஒஸ்மானியா கல்லூரி கொழும்பு அல் இக்பால் மகா வித்தியாலயம ஆகியவற்றில் அதிபராகவும கமபளை ஸாஹிரா தேசிய கல்லூரியின் அதிபராகவும கடமையாற்றினார்—

பின்னர் அனுராதபுர கல்வித் திணைக்களத்தில் கல்வி அதிகாரியாகவும குருநாகல் கல்வித் திணைக்களத்திலும கண்டி கல்வித் திணைக்களத்திலும பிரதம கல்வி அதிகாரியாகவும கடமை புரிந்துள்ளார்—

(ஐ—01)

'கொழும்பில் உள்ள

# சகல பாடசாலைகளிலும் விளை. மைதானங்கள்

## சிறிசேன குரே உறுதி

கொழும்பு, மார்ச் 30

கொழும்பில் உள்ள ஒவ்வொரு பாடசாலைக்கும் விளையாட்டு மைதானம் ஒன்று உருவாக்கித் தரப்படும்.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன குரே இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

நாரஹென்பிட்டி [illegible] சேனநாயக்க வித்தியாலயத்தில் நடைபெற்ற [illegible] போட்டியின் இறுதி நாள் [illegible] பிரதம விருந்தினராக சிறிசேன குரே கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:

[illegible] கொழும்பு மேயராக இருந்த போது கொழும்பு மாநகர எல்லைக்குள் 37 விளையாட்டு மைதானங்களை அமைத்தேன். இப்போது கொழும்பில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் விளையாட்டு மைதானங்களை அமைக்கத் தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இளைஞர்கள் ஒழுக்கம், கட்டுப்பாடு கொண்டவர்களாக உருவாக வேண்டும் என்ற எண்ணத்துடனேயே இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பாடசாலை விளையாட்டு மைதானங்கள் ... இலங்கைக்கு பெருமை தேடித் தரக் கூடிய வீரர்களை உருவாக்கும் வல்லமை கொண்டவை.

சர்வதேச மட்ட ஆட்டங்களில் வெற்றியீட்டி இலங்கையின் [illegible] பிடிக்க வீரர்கள் [illegible] இந் நாடு [illegible] கிறது.

மாணவர்களை ஒழுக்கம் கொண்டவர்களாக உருவாக்குவதன் [illegible] எமது [illegible] [illegible] சர்வதேச [illegible] [illegible] வீரர்களை [illegible] [illegible] சக்தி [illegible] பாடசாலை [illegible] விளையாட்டு [illegible] பெற்றுக் கொண்ட [illegible] மாணவர்களை [illegible] உருவாக்கியிருக்கின்றன. [illegible] விளையாட்டுத் [illegible] மாணவர்கள் உயர்வதற்கு மனஉறுதி அவசியம். இம் மன வலிமை ஆட்டங்களில் ஈடுபடுவதன் மூலம் உருவாக்கப்படுகிறது.

இப்படி அவர் தெரிவித்தார். (எ-032)

## [illegible] இல்லம் முதலிடம்

மாத்தறை, மார்ச் 29

மாத்தறை தாருல் உலூம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் வித்தியாலய திடலில் நடைபெற்றது.

[illegible] இல்லம் 431 புள்ளிகளைப் பெற்று சாம்பியன் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

மாத்தறை தமிழ் கல்வி அதிகாரி ஜனாப் [illegible] தின் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியில் "[illegible]" இல்லம் 356 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் "மர்வா" இல்லம் 344 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் சுவீகரித்துக் கொண்டன. (எ-ரி-430)

## விளையாட்டு பகுதி

## இங்கிலாந்து செல்ல நியூஸி. அணி தெரிவு

வெலிங்டன், மார்ச் 30

இவ்வாண்டு நியூஸிலாந்து மேற்கொள்ளவிருக்கும் இங்கிலாந்து மீதான கிரிக்கெட் சுற்றுப் பயணத்துக்கு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நியூஸிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இத் தகவலை வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்து ஆட்டங்களில் ஜோன் ரைட் தலைமையில் ரிச்சர்ட் ஹட்லியும் கலந்து கொள்வார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரிச்சர்ட் ஹட்லிக்கு இப்போது 38 வயதாகிறது. இவர் 400 விக்கெட்டுகளைக் கைப்பற்றி உலக சாதனையொன்றை ஏற்படுத்தியுள்ளார். இடைக்காலத் தலைவனாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஜோன் ரைட், இந்தியாவிலும் அவுஸ்திரேலியாவிலும் நடைபெற்ற ஆட்டங்களில் தமது அணிக்கு வெற்றியீட்டித் தந்தவராவார். மேலும் இவர் மூன்று டெஸ்ட் சதங்களையும் எடுத்திருந்தார்.

நியூஸிலாந்து அணியில் அடம் பரோர், மார்க் பிரீஸ்ட் ஜொனதன் மில்மௌ ஆகியோர் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். நியூஸிலாந்து அணி விவரம் வருமாறு:

ஜோன் ரைட் மார்டின் குறோ ஜோன் பிரேஸ்வெல் ஜெப் குறோ டிரெவர் பிரான்ஸின் மார்க் கிறேட் பெட்ச் ரிச்சர்ட் ஹட்லி அன்று ஜோன்ஸ் ஜொனதன் மில்மௌ டெனி மொரிசன் அடம் பரோர் மார்க் பிரீஸ்ட் கென் ருதர்போர்ட் இயன்ஸ்மித் மார்டின் ஸ்நிடன் ஷேன் தொம்சன். (எ-032)

## இல்ல விளை போட்டிகள்

கொழும்பு, மார்ச் 30

தும்பர தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

விளையாட்டுப் போட்டிக்கு வித்தியாலய அதிபர் எஸ் கணேசமூர்த்தி தலைமை தாங்கினார். (எ-041)

## விளையாட்டு போட்டி

இராகலை, மார்ச் 29

ஹல்கிரனோயா சென் லேனாட்ஸ் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் முறையே 268, 266 248 புள்ளிகளைப் பெற்று முதலாம் இரண்டாம் மூன்றாமிடங்களை "புல்ட்டோ" யூரேன்ஸ் நெப்டியூன் ஆகிய இல்லங்கள் பெற்றுக் கொண்டன. எ-ரி-265)

## வடக்கு கிழக்கில் 2500 வீடுகள்

வவுனியா மார்ச் 29

வடக்கு கிழக்கு மாகாணத்தில் 2500 வீடுகள் அமைக்கும் திட்டம் ஒன்றுக்கு யு எஸ் நிறுவனம் நிதி உதவி வழங்கவிருக்கிறது.

மாவட்டத்துக்கு 300 வீடுகள் என்ற வீதத்தில் இந்த திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கப்படவிருக்கின்றன.

ஒவ்வொரு வீடும் 15 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படும். மாகாண சபையின் வீடமைப்புத் திணைக்களத்தினூடாக இந்த வீடுகள் அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-101)

## 'தல்வத்த கோமஸ்' அணி வெற்றி

மடவளை, மார்ச் 29

உடத்தலவின்ன வின்கோ விளையாட்டுக் கழகம் நடத்திய அணிக்கு ஆறு பேர் கொண்ட கிரிக்கெட் போட்டியில் தல்வத்த "கோமஸ்" அணி வெற்றி பெற்றது. யுனிமெக் சுற்றுக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டது. வேறு பணப் பரிசில்களும் கொடுக்கப்பட்டன.

அண்மையில் தும்பறை மைதானத்தில் நடைபெற்ற மேற்படி கிரிக்கெட் போட்டியில் தல்வத்த "கோமஸ்" விளையாட்டுக் கழகமும் உடத்தலவின்ன என் எச் எஸ் கழகமும் மோதின.

இச் சுற்றுப் போட்டியில் மொத்தம் 42 கோஷ்டிகள் பங்குபற்றி மேற்படி இரு கோஷ்டிகளுமே இறுதிப் போட்டிக்குத் தெரிவகின. (எ-ரி-431)

## இல்ல விளையாட்டு போட்டிகள்

கொழும்பு, மார்ச் 29

பாதுக்கை ஹேவாகம தோட்ட பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் கடந்த 23ஆம் திகதி யன்று பாடசாலை வளவில் நடைபெற்றன.

அதிபர் திரு பீட்டர் நிகழ்ச்சிகளுக்கு தலைமை தாங்கினார். மேற்படி பாடசாலையின் முதலாவது இல்ல விளையாட்டுப் போட்டி இதுவென்றும் அடுத்த ஆண்டுகளில் இதைவிட சிறப்பாக போட்டிகளை நடத்த உத்தேசித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ந)

## உடற் பயிற்சி போட்டி

புங்குடுதீவு, மார்ச் 29

யாழ் கோட்டக் கல்வி பிரிவுப் பாடசாலைகளுக்கிடையேயான உடற் பயிற்சிப் போட்டி அண்மையில் யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

யாழ் கோட்டக் கல்வி அதிகாரி திரு சி தியாகராசா தலைமை வகித்தார்.

இப் போட்டியின் போது யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி பெரியதம்பி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வெற்றியீட்டிய பாடசாலைகளுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார். (எ-240)




# சேவைகள்

## மார்ச் 31 (சனிக்கிழமை)

### வந்து சேரும் நேரம்

| | | |
|---|---|---|
| 0500 | ரோம | யூ எல் 582 |
| 0515 | மஸ்கட் | ஜீ எப் 3144 |
| 0655 | சிப்பல் அபுதாபி பாரிஸ் | யூ எல் 564 |
| 0720 | பிராங்க்போர்ட் சூரிச் டுபாய் | யூ எல் 548 |
| 0710 | சிப்பல், தஹ்ரேன் கராச்சி | கே எல் 801 |
| 0845 | டுபாய் மாலைதீவு | ஈ கே 802 |
| 1055 | திருச்சி | யூ எல் 132 |
| 1140 | சென்னை பமபாய் | ஐ சி 573 |
| 1345 | மாலைதீவு டுபாய் | ஈ கே 803 |
| 1355 | மாலைதீவு | யூ எல் 102 |
| 1550 | திருவனந்தபுரம | யூ எல் 162 |
| 1755 | பமபாய் சென்னை | ஐ சி 574 |
| 2230 | சிங்கப்பூர் | எஸ் கியூ 402 |
| 2315 | சென்னை | யூ எல் 122 |
| 2330 | சிங்கப்பூர் | யூ எல் 303 |
| 2355 | ஹொங்கொங் பாங்கொக் | யூ எல் 423 |

### புறப்படும நேரம

| | | |
|---|---|---|
| 0630 | மஸ்கட் | ஜீ எப் 3145 |
| 0805 | திருச்சி | யூ எல் 137 |
| 0845 | ஹொங்கொங் பாங்கொக் | யூ எல் 622 |
| 0930 | சிங்கப்பூர் | யூ எல் 302 |
| 0950 | டுபாய் மாலைதீவு | ஈ கே 802 |
| 1000 | மாலைதீவு | யூ எல் 101 |
| 1235 | சென்னை பமபாய் | ஐ சி 585 |
| 1300 | திருவனந்தபுரம | யூ எல் 161 |
| 1450 | மாலைதீவு டுபாய் | ஈ கே 803 |
| 1730 | பஹ்ரேன் | யூ எல் 201 |
| 1840 | பமபாய் சென்னை | ஐ சி 574 |
| 1905 | கராச்சி தஹ்ரான் சிப்பல் | கே எல் 802 |
| 1945 | சென்னை | யூ எல் 121 |
| 2345 | சிங்கப்பூர் | எஸ் கியூ 401 |

## ஏப்ரல் 1 (ஞாயிற்றுக்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | |
|---|---|---|
| 0445 | பஹ்ரேன் | யூ எல் 202 |
| 0545 | பஹ்ரேன், தோஹா | ஜீ எப் 144 |
| 1020 | திருச்சி | யூ எல் 132 |
| 0950 | பாரிஸ் மஸ்கட் சிங்கப்பூர் | யூ ரி 568 |
| 1055 | டஸகமபேர்க் மியூனிச் | எல் ரி 720 |
| 1140 | சென்னை | ஐ சி 573 |
| 1225 | பாங்கொக் | ரி ஜீ 307 |
| 1405 | திருவனந்தபுரம | யூ எல் 162 |
| 1835 | மாலைதீவு | யூ எல் 102 |
| 2055 | சிங்கப்பூர், மஸ்கட் பாரிஸ் | யூ ரி 567 |
| 2230 | சிங்கப்பூர் | எஸ் கியூ 402 |

### புறப்படும நேரம

| | | |
|---|---|---|
| 0045 | டுபாய், லண்டன் | யூ எல் 503 |
| 0100 | அபுதாபி பாரிஸ் சிப்பல் | யூ எல் 533 |
| 0200 | டுபாய், சூரிச் பிராங்க்போர்ட் | யூ எல் 547 |
| 0700 | பஹ்ரேன், தோஹா | ஜீ எப் 3144 |
| 0730 | திருச்சி | யூ எல் 131 |
| 1100 | பாரீஸ் மஸ்கட் சிங்கப்பூர் | யூ எல் 568 |
| 1115 | திருவனந்தபுரம | யூ எல் 161 |
| 1255 | டஸகமபேர்க், மியூனிச் | எல் ரி 721 |
| 1225 | சென்னை | ஐ சி 574 |
| 1325 | பாங்கொக் | ரி ஜீ 308 |
| 1440 | மாலைதீவு | யூ எல் 101 |
| 1755 | பமபாய், கராச்சி | யூ எல் 181 |
| 2055 | குவைத் | யூ எல் 227 |
| 2205 | சிங்கப்பூர் மஸ்கட் | யூ ரி 567 |
| | பாரிஸ் | யூ எல் 456 |
| 2315 | நெரிடா, புக்கியோகா | |
| 2345 | சிங்கப்பூர் | எஸ் கியூ 402 |

குறிப்பு— யூ எல் — எயார் லங்கா, ஐ சி — இந்தியன் எய லைன்ஸ் ஈ கே — எமிரேட்ஸ் எஸ் யூ — ஏரோ புளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ, டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிங்கப்பூர் எயார் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயார்வேய்ஸ் எஸ் வீ — சவூதியா எஸ் டி — ஸ்டேர்லிங் எயர் லைன்ஸ் ரி ஜீ — தாய் எயார் வேய்ஸ், பி ஒ — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, டி கே பிரத்தியேக சேவை. கே எல் —ரோயல் எயார் லைன்ஸ்.
விமான சேவைகள் மாற்றம் பற்றி அறிய தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் 452218 (விமான நிலையம)

---

விளையாட்டுப் போட்டிக்கு வித்தியாலய அதிபர் எஸ் கணேசமூர்த்தி தலைமை தாங்கினார்— (எ-041)

...தென் ருதர்போர்ட் இயன்ஸ்மித் மார்டின் ஸ்நிடன் ஷேன் தொமசன்— (எ-032)

ரூபா செலவில அமைக்கப்படும— மாநகர சபையின் வீடமைப்புத் திணைக்களத்தினூடாக இந்த வீடுகள் அமைக்கப்படும எனத் தெரிவிக்கப்படுகிறது— (ஐ-101)

தம அதிதியாகக் கலந்துகொண்டு வெற்றியீட்டிய பாடசாலைகளுக்கான பரிசில்களையும சான்றிதழ்களையும வழங்கினார்— (எ-240)

---




### 31—3—1990

அதிகாலை —
2-45 ஸஹர் விசேட நிகழ்ச்சி
காலை —
5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை — வெஙகடேஸ்வர சுப்ரபாதம
5-30 பாமாலை நவக்கிரக ஸ்தோத்திரம
5-45 சைவ நற்சிந்தனை
5-50 கிறிஸ்தவ நற்சிந்தனை
5-55 பத்திப் பாடல்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 வாத்தியம
8-15 தமிழ் மூலம சிஙகளம நடத்துபவர் என் டீ பீரிஸ்
8-30 மாணவர் மன்றம எம எச் பௌசுல் அமீர்
9-00 வர்த்தக சேவை
பகல் —
10-00 கல்வியரஙகம
10-30 அறிவுச்சுடர் நடத்துபவர் கே எஸ் பாலச்சந்திரன்
11-00 இசையமுதம
11-30 ஓடி விளையாடு பாப்பா நடத்துபவர் ரேலஙகி செல்வராஜா
11-45 அரஙகேற்றம
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை
மாலை —
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 இப்தார் விசேட முஸ்லிம நிகழ்ச்சி
6-30 ஞானக்கோவை
6-45 இசைப் பயிற்சி நடத்துபவர் ஏ என் நாராயணன்
7-00 இளைஞர் இதயம
நடத்துபவர் செய்யது ஏ மௌலானா
7-20 இலக்கியக் களஞ்சியம தொகுப்பு கலைவாதி கலீல்
7-40 இஷாத் தொழுகைக்கான அஸான்
7-45 முஸ்லிம செய்திகள்
7-50 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
7-55 உலகச் செய்திகள்
இரவு —
8-00 நாட்டுப் பாடல்கள்
8-15 குன்றின் குரல் தொகுப்பு ஜோசப் ராஜேந்திரன்
8-45 மெல்லிசைப் பாடல்கள்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பத்திப் பாடல்கள்
9-30 நாடகம அந்த முழக்கம "என்றும ஒலிக்கும" எழுதியவர் எஸ் ஐ எம அப்துல் ஜப்பார்
10-00 நாதஸ்வரம — கே பி ராசமாணிக்கம
10-45 நினைவில் நிறைந்தவை
11-00 ஒலிபரப்பு முடிவு

### 1—4—1990

அதிகாலை —
2-45 ஸஹர் விசேட நிகழ்ச்சி
காலை —
5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை — பத்மநாப சுப்ரபாதம
5-30 பாமாலை — கருமாரியமமன் திருவிருத்தம
5-45 சைவ நற்சிந்தனை
5-50 கிறிஸ்தவ நற்சிந்தனை
5-55 பௌத்த நற்சிந்தனை
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 கிறிஸ்தவ கீதங்கள்
8-15 மெல்லிசைப் பாடல்கள் — ராணி ஜோசப்
8-30 சுவாரா மலாயூ மலாய் மஞ்சரி —
9-00 வர்த்தக சேவை
பகல் —
10-00 கல்விச் சேவையின் ஆங்கில பாடம
10-30 வீட்டு நாடகம — கே எஸ் பாலச்சந்திரன்
10-45 பூவையர் பூஙகா — நடத்துபவர் சற்சொரூபவதி நாதன்
11-16 சிறுவர் மலர் — நடத்துபவர் வானொலி மாமா
11-45 நேயர் கடிதம
12-00 வர்த்தக சேவை
12-46 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை
மாலை —
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 இப்தார் விசேட முஸ்லிம நிகழ்ச்சி
6-30 ஞானாமிர்தம
6-45 கிறிஸ்தவ கீதங்கள்
7-00 சிறுகதை — "இறைவன் வகுத்த வழி" பிரதி — ஜனாபா ஆயிஷா ஜமால்தீன்
7-10 அறிவுக் களஞ்சியம கமபஹா மாவட்ட முஸ்லிம மகா வித்தியாலயங்களுக்கிடையே நடைபெற்ற அறிவுக் களஞ்சியம போட்டி நிகழ்ச்சி நடத்துபவர் ஏ சி ராவுத்தர் நெய்னா முஹமமத்
7-40 இஷாத் தொழுகைக்கான அஸான்
7-45 முஸ்லிம செய்திகள்
7-50 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
7-55 உலகச் செய்திகள்
இரவு —
8-00 கத்தோலிக்க நிகழ்ச்சி — புதிய உலகம — மலர் வேந்தன்
8-30 கிறிஸ்தவப் பாடல்கள்
8-45 ராக ரசம — நடத்துபவர் எஸ் கே பரராஜசிஙகம
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 கவிதைச் சித்திரம — எப்படிப் பாடினரோ — சில்லையூர் செல்வராஜன்
9-45 இசைக் கச்சேரி — எம பி பாலசுப்ரமணியம
10-45 நினைவில் நிறைந்தவை
11-00 ஒலிபரப்பு முடிவு.




### ரூபவாஹினி

#### 31—3—1990

ஒளிபரப்பு — I
7-00 ப்ரேக்பாஸ்ற் ஷோ
9-30 ஒளிபரப்பு முடிவு.
ஒளிபரப்பு — II
பி.ப —
4-30 காயனா (சிஙகளம)
5-00 மாகாணச் செய்திகள் (சிஙகளம)
5-30 மெஜிக்கல் வேர்ல்ட் ஒஃப் கீ கீ
6-00 முமமணிகளுக்கு அஞ்சல்
6-15 தமிழ்ப் பாடல்கள்
6-30 செய்திகள் — தமிழ்
7-00 விவரணம
7-30 இசை நிகழ்ச்சி
8-00 செய்திகள் — சிஙகளம
8-30 யசோராவய
9-00 திர தரு சினிமா தொரத்துரு
9-30 செய்திகள் — ஆஙகிலம
10-00 ட்ரான்ஸ்வேர்ல்ட் ஸ்போட்
10-55 ஸ்கயர்குரோ அன்ட் மிசிஸ் கிங
11-45 ஒளிபரப்பு முடிவு.

### ஐ. டி. என்.

5-00 சிசெமி ஸ்ட்ரீட்
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 "மல் கக்குலு"
6-30 மதுரசாஙக
7-30 சனிதா வாசனா
8-00 டேக் தி ஹை றோட்
8-30 டிஸ்கோ ரலி
9-00 நீரோ வுல்ப்
10-00 செய்திகள் ஆஙகிலம
10-26 றமழான் விசேட நிகழ்ச்சி
11-00 ஒளிபரப்பு முடிவு.

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

# கல்முனை நீதிமன்ற விசாரணைகள் நிறுத்தம்

## அனுமதி பெறப்படவில்லையாம்

கொழும்பு, மார்ச் 30

தமிழீழ விடுதலைப் புலிகளின் வேண்டுதலின் பேரில் கல்முனை நீதிமன்ற விசாரணைகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் நீதிமன்றத்தின் ஏனைய அலுவல்கள் வழமை போல் நடைபெற்று வருகின்றன.

கல்முனை விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு கண்ணன் கடந்த புதன்கிழமை காலை 8.30 மணியளவில் நீதிமன்றத்தினுள் சென்று விசாரணைகளை நிறுத்தி வைக்குமாறு வேண்டுகோள் விடுத்தார் என அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் சிவில் நிர்வாக பணிகள் தவிர்ந்த பொலீஸ் மற்றும் நீதிமன்ற பணிகளை மேற்கொள்ளக் கூடாது என தாம் ஏற்கனவே பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அதன் அடிப்படையிலேயே கல்முனை நீதிமன்ற பணிகளை தாம் நிறுத்தியதாகவும் புலிகள் இயக்கத்தின் மட்டக்களப்பு பிரதேச அமைப்பாளர்களில் ஒருவரான திரு கரிகாலன் தெரிவித்தார்.

பொலிஸார் வீதிப் போக்குவரத்து விடயத்தில் மாத்திரம் செயற்படத் தாம் இடமளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

[உ—கு—ர]

## சமய நிகழ்ச்சிகள்

### சங்காபிஷேகம் பூர்த்தி

கொழும்பு, மார்ச் 30

கொழும்பு, கொட்டாஞ்சேனை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய சங்காபிஷேகம் நாளை 1ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும்.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு சங்காபிஷேகமும் (1008) விசேஷ அபிஷேகமும் நடைபெறும்.

மாலை 6-30 மணிக்கு வசந்த மண்டப தீபாராதனையும் பஞ்சமுகார்ச்சனையும் அதைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி வலம் வருதலும் இடம்பெறும்.

மேற்படி ஆலய வருஷாபிஷேக உற்சவம் கடந்த 23 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்களாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

[ந—ர]

### சண்முகார்ச்சனை பூர்த்தி

கொழும்பு, மார்ச் 30

நாட்டில் சாந்தி, சமாதா...

## ஈரோஸ் தில்லைநாதன் புதிய எம். பி.

ஈழவர் ஜனநாயக முன்னணியின் யாழ் மாவட்ட புதிய எம் பி யாக திரு கணபதி தில்லைநாதன் [ஈரோஸ்] நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு இளையதம்பி இரத்தின சபாபதியின் ராஜினாமாவை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது நியமனம் குறித்து தேர்தல் ஆணையாளர் அரச வர்த்தமானியில் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

[ந—ர]

## ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் — ரஞ்சன் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 30

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரும் ஐரோப்பிய நாடாளுமன்ற ஒத்துழைப்பு அபிவிருத்திக் குழுவின் தலைவருமான திரு ஹெரி — சாபி வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவை இவ்வார முற்பகுதியில் சந்தித்தார்.

இலங்கைக்கும் ஐரோப்பிய சமூகத்திற்கும் இடையிலான உறவுகள் பற்றியும் ஏனைய நட்புறவு விடயங்கள் பற்றியும் இச்சந்திப்பின் போது பேசப்பட்டது.

இலங்கையில் அமைதியையும் சுமுக நிலையையும் தோற்றுவிக்க எடுக்கப்பட்ட முயற்சிகளை திரு சாபி பாராட்டினார்.

ஐரோப்பிய பொருளாதார சமூகத்திற்கு தமது நன்றியைத் தெரிவித்த திரு ரஞ்சன் விஜேரத்ன இலங்கையின் வளர்ச்சிக்கு மேலும் இக்தாபனத்தின் உதவிகள் தொடர வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

திரு சாபி இவ் விஜயத்தின் போது புனர்வாழ்வு பணிகளின் பணிப்பாளர் கர்னல் ஆனந்த வீரசேகரவையும் சந்தித்தார்.

[ந—404]

## ஊவா மாகாண உல்லாச பயணிகளை ஊக்குவிக்க திட்டங்கள்

பதுளை, மார்ச் 29

ஊவா மாகாணத்தில் உல்லாசப் பயணிகளை ஊக்குவிக்குமுகமாக பல புதிய திட்டங்களை ஊவா மாகாண ஆளுநர் திரு திலக் ரட்னாயக்க வகுத்து வருகிறார்.

கடந்த வாரம் இது சம்பந்தமாக திரு திலக் ரட்னாயக்க ஊவா மாகாண முதலமைச்சர் திரு பேர்ஸி சமரவீர மற்றும் அமைச்சு செயலாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஊவா மாகாணத்தில் உள்ள சகல நீர் வீழ்ச்சிகளையும் மற்றும் புராதன இடங்களான சீதா...

## உடல் ஊனமுற்றோரின்

## நடமாடும் ஜனாதிபதி செயலகம் ஜூலையில் கேகாலையில்

கொழும்பு, மார்ச் 30

எதிர்வரும் ஜூலை மாதம் ஜனாதிபதி நடமாடும் செயலகச் சேவை கேகாலையில் நடத்தப்படும்.

இதன் பொருட்டு இப்பகுதி மக்களின் பிரச்சினைகளைத் திரட்டி முறைப்படுத்தி அவற்றுக்கான நிவாரணங்களைக் கண்டுபிடிக்கும் வகையில் கேகாலை மாவட்டத்தில் சமூக சேவா தினங்கள் நடத்தப்பட உள்ளன.

மேற்படி சமூக சேவா தினங்களின் போது மக்கள் பொதுவான அல்லது தனிப்பட்ட பிரச்சினைகளை, நெருக்கடிகளை தமது உதவி அரச அதிபர்களிடம் முறையிட முடியும். இவை வகைப்படுத்தப்பட்டு ஜூலை மாத ஜனாதிபதி செயலக சேவையின் முன்னர் தீர்வுக்காக வைக்கப்படும்.

மேற்படி சமூக சேவா திட்டத்தில் சப்ரகமுவ மாகாண முதலமைச்சர், கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மாவட்ட அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்வர்.

கேகாலையில் ஜூலை 27, 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் ஜனாதிபதி நடமாடும் செயலக சேவை நடைபெறும்.

[ந—032]

## இந்தியப்படை வெளியேற்றம் நிலைமையை மோசமாக்கும்

### மே. ஜெர்மன் பத்திரிகை தலையங்கம்

ஹம்பேர்க், மார்ச் 30

இலங்கையில் இருந்த இந்தியத் துருப்புகள் வெளியேற்றத்தால் தமிழர், சிங்களவர் பிரச்சினை விரைவில் மேலும் மோசமடையும்.

இவ்வாறு மேற்கு ஜெர்மன் பத்திரிகையொன்று [சுவெடெயட்ஷே ஷெதுங] ஆசிரியர் தலையங்கத்தில் கூறியிருக்கிறது.

தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது—

இராணுவக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது உலகின் நான்காவது மிகப் பெரிய இராணுவத்திற்கு ஏற்பட்டிருக்கும் தோல்வியாக இதனை எடுத்துக் கொள்ளலாம்.

இந்தியத் துருப்புகளை வாபஸ் பெறுவதற்கான அரசியல் காரணம் பொருளாதாரமும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.

இலங்கைக்கு இந்தியத் துருப்புகளை அனுப்பியதில் இந்தியாவுக்கு 100 கோடி டாலர்கள் இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு அந்தப் பத்திரிகை தனது ஆசிரியத் தலையங்கத்தில் தெரிவித்திருக்கிறது.

[ந—எ]

## நூல் வெளியீட்டு விழா 1ஆம் திகதி

புதுக் கவிஞர் அணியினர் நடத்தும் "கங்கையில் மிதந்து வரும் மனிதக் கவிதைகள்" நூல் வெளியீட்டு விழா நாளை 1ஆம் திகதி [ஞாயிற்றுக்கிழமை] காலை 9-30 மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறும்.

தினகரன் பிரதம ஆசிரியர் திரு ஆர் சிவகுருநாதன் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

வடக்கு கிழக்கு மாகாண எதிர்க்கட்சி முதல்வர் ஜனாப் செய்கு இஸ்ஸதீன் கௌரவ அதிதியாகக் கலந்து கொள்வார்.

## ஊழியர்கள் வேலை நீக்கம் தொழில் நீதிமன்ற தாக்கல்களின் தீர்ப்பு ஒரு வருடத்துக்குள்

கொழும்பு, மார்ச் 30

ஊழியர்களின் வேலை நீக்கம் தொடர்பாக தொழில் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்கள் ஒரு வருட காலத்திற்குள் பரிசீலனை செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்.

தொழில் நீதிமன்ற தீர்ப்புகளை ஆட்சேபித்து மேன்முறையீடு செய்பவர்கள் சம்பந்தப்பட்ட ஊழியரின் ஒரு வருட சம்பளத்தை அல்லது தீர்ப்பளிக்கப்பட்ட தொகையை பிணைப்பணமாக செலுத்திய பின்னரே மேன்முறையீடு செய்ய முடியும்.

இவ்வாறு கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்தப்பட உள்ளது.

தொழில் நீதிமன்றங்களிலும் மேன் முறையீட்டு நீதிமன்றங்களிலும் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விசாரித்து முடிக்கவும் தீர்ப்பு வழங்குவதில் ஏற்படும் கால தாமதங்களை தவிர்ப்பதற்குமே இச் சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்தப்பட உள்ளது.

தொழில் அமைச்சரின் சிபார்சுகளின் பேரில் தயாரிக்கப்பட்ட சட்டத் திருத்தங்கள் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளன.

[ந—ய]

## கல்முனையில் கருத்தரங்கு புலிகளால் இடைநிறுத்தம்

### அனுமதி பெறவில்லையாம்

கிழக்கு பிராந்திய போக்குவரத்துச் சபையின் அனுசரணையுடன் கல்முனை வெஸ்லி மகா வித்தியாலயத்தில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற மாணவர் கருத்...

விதிக்கப்பட்டது.

தேசிய போக்குவரத்துத் தினத்தை முன்னிட்டு வீதிச் சட்டங்கள் தொடர்பாக இந்த கருத்தரங்கு நடைபெற்றது.

இந்த விடயம் தொடர்பாக...

## கல்முனையில் அன்னை பூபதிக்கு அஞ்சலி; முஸ்லிம் பெண் தலைமை...

கொழும்பு மார்ச் 29

அன்னை பூபதிக்கு அஞ்ச... செலுத்துமுகமாக ... நேற்று முன்தினம் கல்முனையில் முஸ்லிம் பெண்மணி ஒருவரின் தலைமையில் 100க்கு மேற்பட்ட பெண்கள் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் அனுட்டித்தனர்.

வெள்ளாவெளி மட்டக்களப்பு மாமாங்கேஸ்வர ... யம் ஆகிய இடங்களிலும் ... வாறான உண்ணாவிரதம் அனுட்டிக்கப்பட்டது.

கொழும்பு, மார்ச் 30

நாட்டில் சாந்தி, சமாதானம் வேண்டி கொழும்பு ஜெயந்திநகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவ சுப்பிரமணிய ஆலயத்தில் கடந்த ஜனவரி மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமான சண்முகார்ச்சனை நாளை ஞாயிற்றுக்கிழமையுடன் பூர்த்தியடைகிறது.

அன்றையதினம் காலை 7 மணிக்கு சங்காபிஷேகம், 11 மணிக்கு சண்முகார்ச்சனை, அதைத் தொடர்ந்து உச்சிக்காலப் பூஜை என்பன நடைபெறும்.

நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூஜை, மாலை 5 மணிக்கு சுவாமி வெளிவீதி வலம் வருதல் இடம்பெறும்.

நவாலியூர் பிரதிஷ்டா சிரோமணி சிவானுபூதி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்களும் தேவஸ்தானக் குருக்களும் கிரியைகளை முன்னின்று நடத்தி வைப்பர்.

ஜிந்துப்பிட்டித் தெரு, மேட்டுத் தெரு, ஜெம்பட்டா தெரு, புதுச் செட்டித் தெரு, பாபர் வீதி, ஆட்டுப்பட்டி தெரு, மெயின் வீதி, 5 ஆம் குறுக்குத் தெரு நொரிஸ் வீதி, 4 ஆம் குறுக்குத் தெரு, கெய்ஸர் வீதி, முதலாம் குறுக்குத் தெரு ஊடாக மீண்டும் மெயின் வீதி, செட்டியார் தெரு, கதிரேசன் வீதி, ஆண்டிவால் தெரு, கன்னாரத் தெரு, ஜிந்துப்பிட்டி தெரு வழியாக சுவாமி வீதி வலம் ஆலயத்தை வந்தடையும்.

[ந—ர]

# உடல் ஊனமுற்றோரின் புனர்வாழ்வுக்கு நிரந்தர நிலையம் அமைத்து தரவும்

## ஜனாதிபதியிடம் கேட்க தீர்மானம்

கோப்பாய், மார்ச் 29

"வட பகுதியில் உள்ள உடல் ஊனமுற்றோரின் புனர்வாழ்வுக்கு வசதியான அமைப்புக்களுடன் நிரந்தர நிலையம் ஒன்றை அமைத்துத் தர வேண்டும்.

உடல் ஊனமுற்றோர் நலன் புரிச் சங்கம் ஜனாதிபதியிடம் இவ்வாறு வலியுறுத்திக் கேட்கத் தீர்மானித்துள்ளது.

இதற்கான தீர்மானம் உடல் ஊனமுற்றோர் நலன் புரிச் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் அண்மையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

உடல் ஊனமுற்றோர் நலன் புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் யாழ் இல்சார் மண்டபத்தில் திரு ஏ குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மேலும் பல தீர்மானங்கள் வருமாறு:-

* உடல் ஊனமுற்றோர் சுய தொழில் வாய்ப்பை பெறும் வகையில் பயிற்சி வகுப்புக்களையும் அதற்கான சாதனங்களையும் வழங்க வேண்டும்.

* உடல் ஊனமுற்றோரின் பொழுது போக்கு வசதிகள் விளையாட்டு வசதிகள் என்பனவற்றுக்கு வசதியாக விளையாட்டு மைதானத்தையும் மற்றும் நூல் நிலைய வசதியையும் ஏற்படுத்தித் தர வேண்டும்.

மேற்படி தீர்மானங்களை ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசாவின் நேரடிக் கவனத்திற்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை சங்கத் தலைவர் திரு ஏ குணசிங்கமும், நிர்வாகிகளும் செய்து வருகின்றனர். (இ-142)

சகல நீர் வீழ்ச்சிகளையும் மற்றும் புராதன இடங்களான சீதா எளிய, போகொட பாலம், பிபிலை வெந்நீர் தடாகம் போன்றவை புனரமைப்புச் செய்யப்பட்டு உல்லாசப் பயணிகளிடமிருந்து கட்டணமும் அறவிட ஏற்பாடு செய்யப்படும் எனக் கூறினார். இப்படிச் செய்வதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பு வழங்கவும் சந்தர்ப்பம் ஏற்படும்.

இதேவேளை பதுளை — கொழும்பு ஹெலிக்கொப்டர் சேவை ஒன்றையும் ஏற்படுத்தினால் உல்லாசப் பயணிகளுக்கு இலகுவாக இருப்பதோடு பல வர்த்தகர்களுக்கும் சில நிமிடங்களில் கொழும்பு சென்று வருவதற்கும் வசதியாக இருக்கும் என ஆளுநர் ஆலோசனை தெரிவித்தார்.

[ஐ—037]

க. பொ. த. (சா. த.) சித்தியடைந்த

# மலையக இளைஞர்: ஆசிரிய நியமனங்களால் நன்மையை விட தீமையே

## தொழில் உறவு அலுவலர்

க பொ த சாதாரண தரத்தில் சித்தி அடைந்த மலையக இளைஞர், யுவதிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுவதால் மலையக சமூகத்திற்கு நன்மையை விட தீமையே வந்து சேரும்.

இப்படிக் கூறினார், மலையகத்தின் பிரபல பெண் எழுத்தாளரும், அட்டன் உதவித் தொழில் ஆணையாளர் அலுவலக தொழில் உறவு அலுவலருமான திருமதி ஜெகநாதன்.

அட்டனில் நடைபெற்ற தொழிலாளர் தேசிய சங்கத்தின் மகளிர் தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத்தின் உப தலைவி திருமதி குமார் பஞ்சவர்ணம் விழாவிற்கு தலைமை வகித்தார்.

திருமதி ஜெகநாதன் அங்கு ஆற்றும் பேச்சையில் கூறியதாவது:-

மலையகப் பகுதியில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க இப்போது க பொ த சாதாரண தரம் வரை படித்தவர்களுக்கெல்லாம் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

இதனால் உயர்கல்வி பெறும் மலையக மாணவர்களின் எண்ணிக்கை குறைகிறது.

தகைமை உடையவர்கள் கட்டாயம் உயர் கல்வி பெற வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

இவ் விழாவில் சங்கத் தலைவர் திரு டி அய்யாத்துரை பொதுச் செயலாளரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான திரு பி வி கந்தையா, நிதிச் செயலாளர் திரு பி ... மான் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

(ஐ-096)

வெஸ்லி மகா வித்தியாலயத்தில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற மாணவர் கருத்தரங்கு புலிகள் இயக்கத்தினரால் இடைநடுவில் நிறுத்தப்பட்டது.

அங்கு இருந்த 7 போக்குவரத்து சபை அதிகாரிகளுக்கு 1000 ரூபா வீதம் புலிகள் இயக்கத்தினரால் அபராதம் ... கருத்தரங்கு நடைபெற்றது.

இந்த விடயம் தொடர்பாக கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபை அம்பாறையிலும் கந்தளாயிலும் சிங்கள மொழியில் இரண்டு கருத்தரங்குகளை ஏற்கனவே நடத்தியிருக்கிறது.

இதுபோன்ற கருத்தரங்குகளை நடத்துமுன் தர்மிம அனுமதி பெறப்பட வேண்டும் எனக் கூறியே கல்முனை கருத்தரங்கை புலிகள் இயக்கத்தினர் நிறுத்தியுள்ளனர்.

இதுபோன்ற கருத்தரங்குகளுக்கு பொலிஸார் அழைக்கப்படக் கூடாது எனவும் இயக்கத்தினர் பணித்துள்ளனர்.

[ந—ற]

## ஹதீஸ் மஜ்லிஸ்

காத்தான்குடி 4 ஆலிம் பிளேஸ் ஹதீஸ் மண்டபத்தில் இவ்வருடமும் புனித ரமழான் மாத ஹதீஸ் மஜ்லிஸ் நடைபெறும்.

127 வது ஆண்டாக சங்கைக்குரிய பெரியார் காத்தான்குடி ஜாமிஅத்துல் ஜமாலிய்யா அரபுக் கல்லூரியின் விரிவுரையாளர் ஷெய்குல்ஜமாலி இப்னுஹாமித லெப்பை ஆலிம் (கபூரி) அவர்களால் இவ்வைபவம் நடத்தப்படும்.

ஜாமிஅத்துல் ஜமாலிய்யா அரபுக் கல்லூரியின் நிர்வாகிகள் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார்கள். (ஐ—ந)

... வாறான உண்ணாவிரதம் அ... டிக்கப்பட்டது.

புலிகள் இயக்கத்தின் ம... டக்களப்பு பிரதேச அமை... பாளர் திரு கரிகாலன் இதனை தெரிவித்தார்.

இது போன்ற உண்ணாவிர... நிகழ்ச்சிகள் கடந்த 19 ஆ... திகதி முதல் நடைபெற்று வரு... தாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் ... கல்முனையில் இ... பெற்ற உண்ணாவிரத நிகழ்... சிகள் ஒரு பிள்ளைக்கு தாய... அலியார் அமீரா என்ன... பெண்ணின் தலைமையில் இ... பெற்றதாக திரு கரிகா... மேலும் தெரிவித்தார்.

[ந—

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும் பிற அரச உத்தியோகத்தர்களுக்குமான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் இரண்டாம் மொழிப் பரீட்சையும் — 1990

என் 244

1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆந் திகதி ஆரம்பமாகி நடைபெறவிருந்த மேற்படி பரீட்சை 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆந் திகதி ஆரம்பமாகும் என்பதையும் உரிய பிரவேச அட்டவணைகளும், நேர அட்டவணைப் பிரதிகளும் எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன என்பதையும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அ.தா் வெதமுல்ல
பரீட்சை ஆணையாளர்

05/17/135.
மலே வீதி கொழும்பு-02
26 மார்ச் 1990

635

இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியீட்ட இண்டிபெண்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 இலங்கை தபால் பெட்டி இல 1613 வெளியிட்ட திகதி 31 மார்ச் 1990

DINAPATHI 5, Guna sena Mawatha, Colombo — 12
P. O Box 1613